வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 13.06.2022 திங்கட்கிழமை | இதழ் : 189 | பக்கங்கள் : 16









# குருந்தூர்மலையில் புத்தர் சிலை; தமிழர் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

**முல்லைத்தீவு, ஜூன் 13**

**குருந்தூர்மலையில் அமைக்கப்பட்ட விகாரையில் புத்தர் சிலை நிறுவும் செயல்பாடு நேற்று தமிழ் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.**

இந்து தமிழ் மக்களின் பூர்வீக இடமான முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு - குருந்தூர்மலையில் இராணுவத்தினரின் ஆதரவுடன் விகாரை அமைக்கப்பட்டு வருகின்றது. விகாரை அமைக்கப்படும் பகுதியில் எந்தவிதமான கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது என நீதிமன்றம் தடை உத்தரவு விதித்ததிருந்தது. ஆனால், அதையும் மீறி புராதன முறையில் விகாரை கட்டுமானம் தொடர்ந்தது.

இந்நிலையில், கபோக் கல்லால் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை விகாரையில் நிறுவுவதற்கான பூசை வழிபாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான பிக்குகள், இராணுவத்தினர் மற்றும் தென்னிலங்கையை சேர்ந்த பௌத்த மக்கள் பங்கேற்றனர்.

பிக்குகளின் இந்த செயல்பாட்டுக்கு எதிராக தமிழ் மக்கள் நேற்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பெருமளவில் திரண்ட அந்தப் பகுதி தமிழ் மக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான

15

## தமிழர் முன்னேற்றத்தை தடுக்க வட, கிழக்கில் படைகள் குவிப்பு

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி.

*அம்பாறை, ஜூன் 13*

தமிழர்கள் போன்றே முஸ்லிம்கள் முன்னேற கூடாது என இராணுவத்தை வட, கிழக்கில் குவித்துள்ளனர். இலங்கை இராணுவத்தின் கட்டமைப்பில் 20 படைப் பிரிவுகள் இருக்குமாயின் அதில் 16 படைப் பிரிவுகள் வடக்கு, கிழக்கில் இருக்கின்றன. தற்போதைய சூழ்நிலையிலும் கூட ஜனாதிபதி கோட்டாபய இராணுவத்தினருக்கான எந்தவொரு வளமும் குறைக்கப்படமாட்டாது என கூறி இருக்கின்றார். இது இன

15

## எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்!

### பஸில் ராஜபக்ஷ சொல்கிறார்

*கொழும்பு, ஜூன் 13*

“நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரத்தின்படி எந்நேரமும் எதுவும் நடக்கலாம். எவருக்கும் பதவிகள் நிரந்தரம் இல்லை”, என்று முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்ட

15

## வாராந்த ஒதுக்கீடு முறையிலேயே இனி நுகர்வோருக்கு எரிபொருள்!

### ஜூலை முதல் திட்டம் நடைமுறையாகும்



*கொழும்பு, ஜூன் 13*

நிலையான எரிபொருள் விநியோகத்தை மீட்டெடுக்கும் வரை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நுகர்வோர்களை பதிவு செய்து அவர்களுக்கு உத்தரவாதமான வாராந்த ஒதுக்கீடு வழங்கப்படும். இதைத் தவிர தற்போது வேறு வழியில்லை. எதிர்வரும் ஜூலை முதல் வாரத்தில் இது நடைமுறைக்கு வரும் என நம்புகிறேன்.

15

## வெள்ளிக்கிழமை விடுமுறை அடுத்த வாரத்தில் அமுலாகும்!

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன



*கொழும்பு, ஜூன் 13*

அரச பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த வாரம் முதல் அமுல்படுத்தப்படும் என பொது நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

15

## பாடசாலை நாட்கள் குறைக்கப்படமாட்டாது

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

*கொழும்பு, ஜூன் 13*

பாடசாலை நாட்களை குறைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டாலும் பாடசாலைக்கு வரும் மாணவர்கள், ஆசிரியர்களின் வருகை சிறந்த அளவில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, எரிபொருள் நெருக்கடி மற்றும் பிரச்னைகளால் ஆசிரியர்

15

## விவசாய நிலங்களை கையகப்படுத்த முடிவு

### அமைச்சர் மகிந்த அமரவீர

*கொழும்பு, ஜூன் 13*

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையால் விவசாயத்துக்கு ஏற்ற- கைவிடப்பட்ட காணிகளில் பயிர் செய்கையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக காணிகளை 5 வருடங்களுக்கு பொறுப்பேற்கும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்

15

## இப்படியும் நடக்கிறது...!

அசிரியை ஒருவர் தனது மாணவனிடம் கேட்டார் இரண்டிலை இரண்டு போனால் எவ்வளவு? என்று.

அதற்கு மாணவன், 'புரியயில்லை ரீச்சர், திரும்ப ஒருக்கா சொல்லுங்கோ' என்றான்.

ஆசிரியை உடனே, 'அடேய், உன்னட்டை ரெண்டு இட்லி இருந்தது. நீ ரெண்டு இட்லி சாப்பிட்ட பிறகு மிச்சம் எத்தனை இருக்கும்?' என்று கேட்டார்.

அதற்கு அவன், 'மிச்சம் சம்பல் (சட்னி) தானே இருக்கும் ரீச்சர்' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு நீங்களும் சிரித்திருப்பீர்கள். ஆனால், அவன் சொன்னதும் சரிதானே?. ஆசிரியை 'எத்தனை இட்லி மிச்சமிருக்கும்' என்று கேட்டு, அதற்கு அவன் இந்தப் பதிலை சொல்லியிருந்தால்தான், அது தவறு.

இருபத்தியொராவது அரசியலமைப்பு திருத்தத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதைத் தடைசெய்யும் சரத்து மீண்டும் சேர்க்கப்பட்டிருப்பது பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் பல தடவை குறிப்பிட்டிருக்கின்றேன்.

பத்தொன்பதில் இந்த விடயம் சேர்க்கப்பட்டதே கோட்டா, பசில் போன்றவர்களை இலக்கு வைத்துத்தான் என்பதும் இரகசியமானதல்ல.

ஆனால், அதற்காக தனது அமெரிக்க பிரஜாவுரிமையை திரும்பக் கொடுத்துவிட்டு, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் கோட்டாபய. வெற்றி பெற்றதும் அவர்கள் செய்த முதல் வேலை, தமக்காகவே கொண்டு வரப்பட்ட அந்த விடயத்தை இல்லாமல் செய்து, இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றியதுதான். அதனை நிறைவேற்றியதுமே, பசில் ராஜபக்ஷவை எம்.பி.யாக்கி அமைச்சராக்கினார்கள்.

பின்னர் அவர்கள் குடும்பத்துடன் அமைச்சரவையிலிருந்து வெளியேறியது வேறு சங்கதி. ஆனால், இப்போது மீண்டும் இரட்டை பிரஜாவுரிமை விவகாரத்தை இருபத்தியோராவது திருத்தத்தில் உள்வாங்க முயற்சிகள் நடக்கின்றன.

அந்த விவகாரம் திருத்தத்தில் சேர்க்கப்பட்டால் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று பெருமளவான பொதுஜன முன்னணி எம்.பிக்கள் பிடிவாதமாக இருந்தபோது, திடீரென்று பசில் ராஜபக்ஷ தனது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்தார். அரசமைப்பு திருத்தத்தில் இந்த விடயத்தை நீக்கியாவது பொதுஜன முன்னணியின் ஆதரவைப் பெறவேண்டும் என்று ரணில் கணக்குப்போட்டுக் கொண்டிருக்க, பசிலோ திடீரென்று பதவி விலகி, அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

அதற்குப் பின்னால், பல விடயங்கள் இருப்பதாக கொழும்பில் விசயமறிந்தவர்கள் சந்தேகிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் இருபத்தியொன்றை நிறைவேற்ற முடியாது. அவர்களின் ஆதரவை பெறுவதென்றால் அதற்கு பசில் பச்சைக்கொடி காட்டவேண்டும். அவரது கட்டுப்பாட்டிலேயே பெருமளவான பொதுஜன முன்னணி எம்.பி.க்கள் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்றனர். அவ்வாறிருக்கையில் பசில் திடீரென்று இராஜினாமாச் செய்திருப்பது, இருபத்தியொன்றை தமது ஆதரவு எம்.பி.க்கள் எதிர்க்கும்போது, தனது பதவியை பாதுகாப்பதற்காகத்தான் அதனை அவர்கள் எதிர்க்கின்றனர் என்ற பழி அவர்மீது வந்துவிடும். இப்போது, பதவி விலகிய பின்னர் எதிர்ப்பது அத்தகையை பழியை தேடித்தராது. அதற்காகவே அவர் பதவி விலகினாரே தவிர, இருபத்தியொன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக அல்ல என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள். அதனால்தான் அவர் பதவி விலகல் தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதற்காக கூட்டிய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இருபத்தியொன்றை தான் ஆதரிக்கவில்லை என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். அது தனது தனிப்பட்ட கருத்து என்று அவர் கூறியிருந்தாலும், அவரது விருப்பத்திற்கு மாறாக அதனை ஆதரிக்க அவரது ஆதரவு எம்.பி.க்கள் விரும்பப்போவதில்லை.

இதேவேளை, பசில் ராஜபக்ஷ பதவி விலகுவதாக அறிவித்த அன்றைய தினம் சிங்கள புத்திஜீவி ஒருவர் தனது முகநூலில் எழுதிய குறிப்பு ஒன்றும், இந்த ஊர்க்குருவியின் கவனத்தை பெற்றது.

'இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம்பெறுவதை தடைசெய்யும் அரசமைப்பு திருத்தம் வருகின்றது என்றதும் பதவி விலகியிருக்கிறார் பசில். அப்படியெனில், அவர் பாராளுமன்றில் அங்கம் வகித்து நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்றுவதைவிட, அமெரிக்க குடியுரிமைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார் என்பதை நிரூபித்திருக்கிறார். ஆக, ராஜபக்ஷக்களின் நாட்டுப்பற்றை வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்' என்று அந்த சிங்கள புத்திஜீவி கேள்வி எழுப்பியிருப்பதும் நியாயமானதுதானே?

- ஊர்க்குருவி

## பௌர்ணமி நாள் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கு, பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்தில் பௌர்ணமி விரத கால சிறப்பு சொற்பொழிவு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாவலர் குருபூஜை மற்றும் தலைமையுரையை சிவகாந்தன் ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவை சைவப் புலவர் ச.முகுந்தன், "சைவ வாழ்வில் பௌர்ணமியின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் வழங்குவார்.

சொற்பொழிவின் இறுதியில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## விழிப்புணர்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

உள்ளூர் உற்பத்திக்கான செயலூக்கமும் அரசமைப்பு மாற்றத்துக்கான விழிப்புணர்வும் என்ற தலைப்பில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் லந்துரையாடலில் விசேட உரையை பொதுவுடைமைச் செயல்பாட்டாளரான சி. கா. செந்திவேல் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் கேட்டுள்ளனர். (ஐ)

## அரசின் கடன்கள் தொடர்பில் விசேட கணக்காய்வு ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 13

நாட்டின் அரச கடன்கள் தொடர்பான விசேட கணக்காய்வு ஒன்றை தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

2019 மற்றும் 2021இற்கு இடைப்பட்ட 3 வருட காலப் பகுதியில் பெறப்பட்ட அரச கடன்கள் தொடர்பில் இந்த விசேட கணக்காய்வில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் சுலந்த விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விசேட கணக்காய்வு அறிக்கையை அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

குறித்த கடன்கள் பெறுக்கொள்ளப்பட்ட விதம், நாட்டின் வருமானம் மற்றும் செலவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கணக்காய்வின் போது அதிக கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 21ஆவது திருத்த சட்டத்தை ஜூலைக்குள் நிறைவேற்றுக

### சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

அரசியலமைப்பின் 21வது திருத்தம் ஜூலை மாதத்துக்குள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தின் அதிருப்திக்கு இலங்கை ஆளாக நேரிடும்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் இந்த திருத்தம் நிறைவேற்றப்படுவதை தாம் விரும்பவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சில அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு மாற்ற வேண்டியது அவசியம். உத்தேச திருத்தங்கள் எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஜூலை மாதத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை ஒத்திவைப்பதன் மூலம் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் பொருளாதார நெருக்கடி மோசமடையும். பிரபல தொழிலதிபர் தம்மிக பெரேராவை தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தமை தொடர்பில் கருத்து தெரிவித்தபோது, நாட்டின் பிரச்னைகளுக்கு ஒரு தனிநபரால் தீர்வு வழங்க முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சூழ்ந்துள்ள தனிநபர்கள் எடுத்த முடிவுகளின் விளைவாகவே தற்போதைய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவில் மின்சார சபையின் தலைவர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த சம்பிக்க ரணவக்க, தேசிய இறையாண்மையை மோசமாகப் பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று பலவந்தமாக கைத்தொழில்களுக்கு பிரவேசிக்க முடியாது - என்றார். (ஐ)

# பெரமுனவின் முக்கிய பதவிகள் விரைவில் மாற்றம் செய்யப்படும்!

### கட்சியின் பொதுச் செயலர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் எதிர்வரும் நாட்களில் மறுசீரமைக்கப்படும். எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் அதனை எதிர்க்கொள்ள தயாராகவுள்ளோம். நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைக்கு அரசாங்கம் உரிய தீர்வை முன்வைக்கவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்வது தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

கடந்த இரண்டு வருட காலமாக கோவிட்-19 பெருந்தொற்று வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியது. நாட்டில் கோவிட் -19 பெருந்தொற்று என்பதொன்று தாக்கம் செலுத்தியதையும், அக்காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாடு முடக்கப்பட்டதையும், நிவாரணம் வழங்கியதையும் மக்கள் மறந்து விட்டார்கள்.

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் ஒருசிலர் செயல்பட்டமையால் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தது.

பொருளாதார நெருக்கடியை ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் அரசியல் நெருக்கடியாக்கி மக்களாணைக்கு முரணான வகையில் தற்போது ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். மக்களின் அடிப்படை பிரச்னைக்கு அரசாங்கம் இதுவரை முறையான தீர்வை முன்வைக்கவில்லை.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டமூலம் ஒரு தனிநபரை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களின் தனிப்பட்ட தீர்மானத்துக்கு அமைய 21ஆவது திருத்தத்தை எதிர்ப்பார்கள்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் எதிர்வரும் நாட்களில் மறுசீரமைக்கப்படும். எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள தயாராகவுள்ளோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.06.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், வைகாசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மறுசீரமைப்பு தொடர்பில்?

மறுசீரமைப்பு - இன்றைய நிலையில், இலங்கையின் முதன்மையான பேசுபொருள் இதுதான். இந்த அடிப்படையில்தான், 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் விவாதிக்கப்படுகின்றது. அதாவது, 19ஆவது திருத்தச் சட்டத்தை மீளவும் கொண்டுவருதல். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, பாராளுமன்றத்தை பலப்படுத்துதல் என்னும் அடிப்படையில் தான், 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. 2019இல், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்கும் நோக்கில், 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்போது நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியை எதிர்கொள்ள முடியாத நிலையில், மீளவும் பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்குவதற்கான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள, 1978ஆம் ஆண்டின், அரசியலமைப்பானது, இதுவரையில், 20 தடவைகள் திருத்தப்பட்டிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம்தான் - ஏனெனில், சூழ்நிலைகள் மாறுகின்ற போது, அதற்கேற்ப மாற்றங்கள் தேவைப்படும். ஆனால், இலங்கையை மாறி, மாறி ஆட்சிசெய்த சிங்கள தலைவர்கள் என்போர், தங்களின் அதிகார நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ளும் நடைமுறையொன்று இலங்கையில் தொடர்கின்றது. 2010இல், இரண்டாவது தடவையாக வெற்றிபெற்ற மகிந்த ராஜபக்ஷ, தனதும், தனது குடும்பத்தினரின் நலன்களை கருத்தில் கொண்டே, 18ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தார். யுத்த வெற்றியை அரசியல் மூலதனமாக்கி, ராஜபக்ஷ வம்ச அரசியலை பல தசாப்தங்களுக்கு தொடர முடியுமென்னும், அரசியல் கணக்கின் அடிப்படையிலேயே, மகிந்தவின் நகர்வுகள் இடம்பெற்றன.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, மகிந்தவின் 18ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்கும் நோக்கிலேயே, 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், கோட்டாபயவின் வெற்றியை தொடர்ந்து நிலைமைகள் தலைகீழாகின. இப்போது மீண்டும் பழைய விடயங்கள் தூசு தட்டப்படுகின்றன. ஆனால், இந்த அரசியலமைப்பு மாற்றங்கள் எவையும், இலங்கையில், புரையோடிப் போயுள்ள இன ரீதியான பிரச்னைகளை கையாளும் நோக்கம் கொண்டவையல்ல. அனைத்துமே இருக்கின்ற ஓட்டைகளை ஓரளவு அடைப்பதற்கான முயற்சிகள்தான். இதிலுள்ள அடிப்படையான பிரச்னை. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மீளவும் ஓர் அரசாங்கம் வருகின்றபோது - குறிப்பாக அதிகார போதையுள்ள, ராஜபக்ஷக்கள் போன்றவர்கள் ஆட்சியை கைப்பற்றும்போது, அவர்கள் தங்களுக்கு ஏற்றவாறு, திருத்தங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பே அதிகமுண்டு.

எனவே - இருக்கின்ற அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்களின் எதிர்காலம், எப்போது வேண்டுமனாலும் கேள்விக்குள்ளாகலாம் என்னும் நிலைமைதான் காணப்படுகின்றன. சரி இதற்குப் பதிலாக ஒட்டுமொத்த மாற்றத்துக்கான புதியதோர் அரசியல் யாப்பு தொடர்பில் பேசமுற்பட்டாலும், அதனைக் கொண்டுவருவதற்கான சூழலும் இல்லை. ஒருவேளை, ஒரு கடுமையான புற அழுத்தம் இருக்கும்பட்சத்தில், அது சாத்தியப்படக் கூடும். ஆனால், அவ்வாறானதோர் அழுத்தத்துக்கான சூழலும் இல்லை. இந்த நிலையில் இருக்கின்ற அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு வழிகளும் இல்லை போன்றே தெரிகின்றது.

இந்த நிலையில், மாகாண சபை முறைமையை, வலுப்படுத்தும், மாகாண நிர்வாகத்தில், மத்திய அரசின் தடைகளை போக்கும் வகையிலான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால், அதனை தமிழர்கள் வரவேற்கத்தான் வேண்டும். அதுவும் பழம் நழுவி பாலில் விழுந்துவிடும் வகையில் நிகழ்ந்துவிடப் போவதில்லை. தமிழர்கள் சத்தம் போடாமல், இந்தியாவின் மூலம் (மறைமுகமாகவேனும்) அழுத்தங்களை பிரயோகிக்காமல் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. மறுசீரமைப்பு தொடர்பான உரயாடல்களை தமிழர் பிரமிப்புடன் நோக்குவதற்கு ஒன்றுமில்லையென்பது உண்மைதான். ஆனால், அதனை முற்றிலுமாக நிராகரித்துவிட்டு சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பதிலும் எவ்வித பயனுமில்லை. சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பவர்களிடம் அடுத்த கட்டம் தொடர்பில் எந்தவொரு ஆக்கபூர்வமான வேலைத்திட்டமும் இல்லை.

# கருணை கொலை கேட்கும் ஈழத் தமிழ் இளைஞர்கள்!

*தமிழ் நாடு திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு பகுதியில் உள்ள சிறப்பு முகாம் எனப்படும் மத்திய சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழ் இளைஞர்கள்17 பேர் இருபது நாட்களுக்கும் மேலாக உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வழக்கு விசாரணைகள் முடிவடைந்து விடுதலை செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் பலர் தம்மை விடுதலை செய்து உறவினர்களுடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு கோரியுள்ளனர்.*

*சிறப்பு முகாம் எனப்படும் வதை முகாம் அதிகாரிகள் தம்மைத் துன்புறுத்துவதாகவும், தேவையற்ற முறையில் ஒருவர் மீது பல வழக்குகளைத் தாக்கல் செய்து தொடர்ந்தும் தம்மைத் தடுத்து வைத்திருப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ள இளைஞர்கள், வேதனை தாங்க முடியாததால் தங்களைக் கருணைக் கொலை செய்யுமாறும் கோரியுள்ளனர்.*

*சிறப்பு முகாம் என உலகத்துக்கு காண்பிக்கப்படும் இந்த வதை முகாமில் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தமிழக அரசு உரிய முறையில் விசாரணை நடத்தத் தவறியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் கண்ணீர்மல்க வேதனைப்பட்டனர்.*

*104 ஈழத்தமிழ் இளைஞர்கள் சிறப்பு முகாம் எனக் கூறப்படும் வதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 17 இளைஞர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.*

*உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கடுமையாகச் சுகவீனமடைந்த இரண்டு இளைஞர்கள் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வேறு சிலர் தூக்க மாத்திரைகளை உட்கொண்டதால் மயக்கமடைந்துள்ளனர். ஆனால், அவர்களுக்கு உரிய சிகிச்சையளிக்க சுகாதார அதிகாரிகள் அக்கறை செலுத்தவில்லை. உடனடியாக வந்து பார்வையிடவுமில்லை.*

*அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட இருவருக்கும் உரிய முறையில் சிகிச்சையளிக்கப்படவில்லை என்றும், அதிகாரிகள் அசமந்தமாகச் செயற்படுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.*

*விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் அல்லது வேறு குற்றச் செயல்களில் ஈடுபட முற்பட்டவர்கள் என்று பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியே தம் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பல இளைஞர்கள் சுமார் 15 வருடங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் கூறுகின்றனர்.*

*புழல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கடும் சித்திரவதைகளை எதிர்நோக்கியதாகவும் விடுதலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் சிறப்பு முகாம் எனப்படும் இந்த வதை முகாமில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறிய இளைஞர் ஒருவர், தனது மனைவி பிள்ளைகளைச் சந்திக்க இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்றும் கவலைப்பட்டார்.*

*மன நலம் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவரை நீதிபதி விடுதலை செய்தபோதும், அந்த இளைஞர் தொடர்ந்தும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் உறவினர் ஒருவர் தெரிவித்தார்.*

*குழந்தைகள், சிறுவர்கள் தங்கள் தாய் மாருடன் அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் உணவுக்குக் கூடக் கஷ்டப்படுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் கூறுகின்றனர்.*

*ஒரு வழக்கு விசாரணை முடிவடைந்தால், மீண்டும் வேறொரு பொய்யான குற்றத்தைச் சுமத்தி மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாகவும், பின்னர் அந்த வழக்கு இழுபறி நிலையில் இருக்கும் எனவும் கூறியுள்ள இளைஞர்கள், வேறு பலருக்குப் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக குற்றப் பத்திரிகை எதுவுமே தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டி வேதனைப்பட்டனர்*

*மனைவி பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு நீதிமன்றத்தில் கோரிய போது, அதற்குரிய ஏற்பாட்டைச் செய்யுமாறு நீதிபதிகள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர். ஆனால் அதிகாரிகள் வேறு காரணங்க ளைக் கூறிச் சிறப்பு முகாம் எனப்படும் வதை முகாமிலேயே தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர்.*

*நீதிமன்ற உத்தரவுகளையும் மீறித் தடுத்து வைக்கப்பட்டிருப்பது நீதிமன்றத்திற்குத் தெரியாது. அத்துடன் தமது சட்டத்தரணிகள் வந்து தம்மைச் சந்திக்கவும் முடியாது. ஏதேனும் கையொப்பம் தேவையென்றால் மாத்திரமே சட்டத்தரணிகளை முகாமுக்கு உள்ளே வர அதிகாரிகள் அனுமதிக்கின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் கூறுகின்றனர்.*


*“நாங்கள் ஈழத்தமிழர்கள் எங்களை ஏன் இங்கு தடுத்து வைத்திருக்கிறீர்கள். எங்களைத் தாயகத்துக்கு அனுப்பி விடுங்கள் நாங்கள் அங்கு சென்று வாழ்கின்றோம்“ எனப் பல தடைவை கோரியும், எந்தவொரு அதிகாரிகளும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இளைஞர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.*

*சிறப்பு முகாமில் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் வெளியில் உள்ள தமிழக உயர் அரச அதிகாரிகள் பலருக்குத் தெரியாது. உயர் அதிகாரிகள் சிலர் முகாமைப் பார்வையிட வந்தாலும், முகாம் அதிகாரிகள் அவர்களுக்குப் பொய்களைக்கூறி அனுப்பிவிடுவார்கள்.*

*முகாமில் உள்ள அதிகாரிகளினால் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து நீதிமன்ற விசாரணையின்போது வாய்விட்டு அழுது புலம்பி முறையிட்டாலும், முகாம் அதிகாரிகள் அதனை மறுத்து நீதிபதிகள் நம்பும் வகையில் பொய் கூறுவார்கள். முகாமில் சகல விதமான சொகுசு வசதிகளும் உண்டு என்றும் நீதிபதிகளிடம் பொய் சொல்வார்கள்.*

*தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களைப் போதைவஸ்த்துக் குற்றவாளிகள் போன்றே முகாம் அதிகாரிகள் நீதிமன்றத்தில் குற்றங்களைச் சுமத்துவார்கள். ஆனால் குற்றத்துக்குரிய ஆவணங்களை அவர்களினால் சமர்ப்பிக்க முடிவதில்லை. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலிலும், தமிழ் நாடு திருச்சி மாவட்டத்தில் உள்ள இந்த சிறப்பு முகாமில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் இளைஞர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமெனக் குரல் கொடுக்குமாறு ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 13 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 30
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
சிறு சிறு பிரச்னை தோன்றும். நினைத்த செயலை இன்று செய்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள். குடும்ப தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். சந்தோஷம் உண்டாகும்.

**இடபம்**
தம்பதியர்களிடம் இருந்து வந்த பிரச்னை மறையும் நாள்.நண்பர்களின் துணையுடன் புதிய செயல் ஒன்றை மேற்கொள்வீர்கள். உங்களுடைய உயர்ந்த எண்ணம் இன்று நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
உங்களுக்கு புதிய உற்சாகம் தோன்றும். குடும்பத்தில் தோன்றிய பிரச்னைகளை சரி செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.பணியிடத்தில் அமைதியாக செயல்பட்டு நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்**
திருப்புமுனையான நாள்.குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள். எதிர்பார்த்த லாபம் உண்டு. உறவினர் ஒருவர் உங்கள் உதவியை நாடி வருவர். செல்வாக்கு உயரும்.

**சிம்மம்**
லாபம் அதிகரிக்கும். தொழிலில் இருந்து வந்த சிக்கலை சரி செய்வீர்கள். நிம்மதியான நாள்.எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். புதிய முயற்சிக்கு யோசிப்பீர்கள்.மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். பொது இடத்தில் பாராட்டு கிடைக்கும்.

**துலாம்**
நேற்றைய பிரச்னை இன்று முடிவுக்கு வரும். பணியிடத்தில் நீங்கள் விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள்.குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். பணவரவில் ஏற்பட்ட தடை விலகும்.

**விருட்சிகம்**
பிள்ளைகளின் கல்வி தொடர்பான முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.குடும்ப செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**தனுசு**
எதிர்பார்த்த பணம் உங்கள் வீடு தேடி வரும். லாபகரமான நாள்.உங்கள் செயல்களில் விவேகம் இருக்கும். விழிப்புடன் செயல்படுவீர்கள்.குடும்பத்தினரிடம் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும்.

**மகரம்**
தொழிலை விருத்தி செய்வதற்காக புதிய முயற்சியில் இறங்குவீர்கள்.வியாபாரத்தில் புதிய முதலீடுகளால் லாபம் ஏற்படும் நாள்.நேற்று நினைத்த ஒரு வேலையை இன்று செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்**
உறவினர்கள் ஆதரவுடன் உங்களுடைய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்களுடைய எண்ணம் ஒன்று நிறைவேறும். விரும்பியதை அடைவீர்கள். உங்கள் மனம் அமைதியை நாடும்.

**மீனம்**
வெளியூர் பயணங்களால் சிரமம். அலைச்சலும், செலவும் அதிகரிக்கும்உங்கள் உடல் சோர்வடையும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலர் உங்கள் மீது இன்று கோபம் கொள்வார்கள்.

# இலங்கைக்கு ரூ. 7000 கோடி கடன் எதற்காகக் கொடுக்க வேண்டும்?

## நாம் தமிழர் சீமான் கேள்வி

*சென்னை, ஜூன் 13*

இலங்கைக்கு ரூ.7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் எதற்காக கொடுக்க வேண்டும். அவர்கள் நமக்கு விசுவாசமாக இருப்பார்களா? இப்படி கேள்வி எழுப்பியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

நேற்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவேந்தலில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் தேசிய அரசியலை விதைத்தவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். அவரை நினைவு கூருவதில் பெருமை அடைகிறோம். நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பாரதிய ஜனதா பேசி நாட்டைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இஸ்லாமியர்களின் வாக்கு வேண்டாம் என்று சொல்லும் பாரதிய ஜனதா அவர்களுடைய வரி வேண்டாம் என்று சொல்லுமா? இலங்கைக்கு ரூ.7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் எதற்காக கொடுக்க வேண்டும். அவர்கள் நமக்கு விசுவாசமாக இருப்பார்களா?

18 ஆண்டுகள் தொடர்ச்சியாக மத்தியில் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது கச்சதீவை மீட்க தி.மு.க.வுக்கு சரியான நாள் வரவில்லையா? இங்கு தமிழுக்கும் சமஸ்கிருதத்துக்கும்தான் பகை. இதற்கு இடையில் திராவிடம் என்பது போலி. பாரதிய ஜனதா மாநில தலைவர் ஊழல் பட்டியலை வெளியிடுகிறார். ஊழலைப் பற்றி பேசுபவர், எதற்காக ஊழல் கட்சிகளோடு கூட்டணி வைத்துள்ளார்.

ஊழல் கட்சிகளின் தலைவர் சிலையை திறந்து வைப்பதற்கு ஏன் துணை குடியரசுத் தலைவர் வரவேண்டும்? பாரதிய ஜனதா கட்சி தனித்து போட்டியிட தயாரா? உள்ளாட்சி தேர்தலில் 100 கோடி ரூபாய் செலவு செய்த கட்சி பாரதி ஜனதா. அ.தி.மு.க. பஞ்சத்துக்கு திருடர்கள். தி.மு.க. பரம்பரை திருடர்கள் - என்றார். (ஐ)

# திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை

*திருச்செந்தூர், ஜூன் 13*

திருச்செந்தூர் வைகாசி விசாக திருவிழாவில் நேற்று இலட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு குவிந்தனர்.

வைகாசி விசாக திருவிழா கடந்த 3ஆம் திகதி தொடங்கியது. இதையடுத்து நாள்தோறும் பகலில் தங்க சப்பரத்தில், கோவிலின் வசந்த மண்டபத்தில் எழுந்தருளிய சுவாமி ஜெயந்திநாதரை பக்தர்களுக்கு தரிசனம் செய்தனர்.

இந்த நிலையில் வைகாசி விசாகத்தின் 10ஆவது நாளான நேற்று அதிகாலை 1 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட பூஜை, அதனை தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றன.



கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா ஊரடங்கால் பக்தர்கள் இன்றி வைகாசி விசாக திருவிழா நடைபெற்ற நிலையில், இந்த ஆண்டு திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருச்செந்தூர் கடற்கரையிலும் பக்தர்களின் கூட்டம் அலைமோதியது. (ஐ)

# இராமர் பாலம் உருவானது எப்படி? கடலுக்கு அடியில் விரைவில் ஆய்வு

*இராமேஸ்வரம், ஜூன் 13*

இந்தியாவின் தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் இராமர் பாலம் எப்படி, எப்போது உருவானது என்பது குறித்த ஆய்வு விரைவில் கடலுக்கு அடியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.




இராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரையிலுமான கடற்பகுதியில் 13 மணல் தீடைகள் உள்ளன. தனுஷ்கோடியிலிருந்து முதல் 6 தீடைகள் இந்தியாவுக்கும், 7-ல் இருந்து 13 வரையிலான தீடைகள் இலங்கைக்கும் சொந்தமானவை.

இந்த மணல் தீடைகள் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களின் நம்பிக்கையோடு தொடர்புள்ளவைகளாக இருப்பதால் இராமர் பாலம், ஆதாம் பாலம் என அழைக்கப்படுகிறது. தமிழில் சேது என்றால் பாலம் என்றும் அர்த்தம்.

இது இராமர் கட்டிய பாலம் என இந்து சமய மக்களால் நம்பப்படுகிறது. சேது சமுத்திர திட்டத்தால் இந்த மணல் தீடைகளுக்கு பாதிப்பு ஏற்படும். இது இந்துக்களின் உணர்வுகளை புண்படுத்தும் எனக் கூறி, உச்ச நீதிமன்றத்தில் சுப்பிரமணியன் சுவாமி வழக்கு தொடர்ந்தார். இராமர் சேது பகுதிக்கு சேதம் வராமல் சேது சமுத்திர திட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு உச்ச நீதிமன்ற பரிந்துரைத்தது. மேலும் இது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நீண்ட கால வழக்கு ஆகும்.

இந்தநிலையில் கடந்த ஆண்டு தேசிய கடல்சார் நிறுவனம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை ஆகிய இரண்டு அமைப்புகள் இராமர் பாலத்தை ஆய்வு செய்ய அனுமதி கோரியதன் அடிப்படை யில் மத்திய தொல்லியல் ஆய்வு நிறுவனம் அதற்கு ஒப்புதல் வழங்கியது.

தேசிய கடல்சார் நிறுவனம் இந்தியாவின் தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் உள்ள மணல் தீடைகளில் இரண்டு முறை கள ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த ஆய்வுகளின் போது தீடைகளில் கடல் மட்டம் உயர்ந்து மணல் குவிந்திருந்திருந்தால் தேசிய கடல்சார் நிறுவனத்தால் எவ்வித முடிவுக்கும் வர முடியவில்லை.

இந்நிலையில் மூன்றாவது கட்டமாக தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையில் உள்ள மணல் தீடைகளில் விரைவில் துளையிட்டு மாதிரிகளை சேகரித்து அவற்றை ஆய்வு செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மணல் தீடை பகுதிகளில் கடல் மட்டம் குறைந்திருக்கும் காலங்களில் இந்த பணி தொடங்க தேசிய கடல்சார் நிறுவனம் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பரந்தன் அந்தோனியார் ஆலயத்தில் யாழ். ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுப்பு

*கிளிநொச்சி, ஜூன் 13*

பரந்தனில் புனரமைப்பு செய்யப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நேற்று முன் தினம் பிரதிஷ்டை செய்யப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கிளிநொச்சி - பரந்தனில் 1976 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயம் திருத்தப் பணிகளின்றி காணப்பட்டது.

இந்த ஆலயம் அந்தப் பகுதியை சேர்ந்த பங்கு மக்களும், புலம்பெயர்ந்து வாழும், இந்து - கிறிஸ்தவ மக்களும் வழங்கிய நிதிப் பங்களிப்பான 72 இலட்சம் ரூபாய் செலவில் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டது.

இந்த ஆலயமே நேற்று முன்தினம் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. பரந்தன் பங்குத் தந்தை ஆர். எச். சகாயநாயகம் ஒழுங்குபடுத்தலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, ஆலய பங்கு மக்கள் சார்பில் யாழ். மறை மாவட்ட ஆயரும் மதிப்பளிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் ஆயர் இல்ல பங்கு தந்தையர்கள் அயல் பிரதேச பங்கு தந்தையர்கள் அருட் சகோதரிகள் பங்கு மக் கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# பூப்புனித நீராட்டு விழா நடந்த வீட்டில் வாள்வெட்டு நடத்திவிட்டுக் கொள்ளை

## வடமராட்சியில் துணிகரம்

**வடமராட்சி, ஜூன் 13**

**பூப்புனித நீராட்டு விழா நடந்த வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு அவர்கள் அணிந்திருந்த 10 பவுண் நகைகளை கொள்ளையிட்டு சென்றனர்.**

நேற்று நள்ளிரவு தாண்டிய பின்னர் இடம்பெற்ற இந்தச் சம்பம் வடமராட்சி - துன்னாலை - மாக்கிரான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில், கணபதிப்பிளை தயானந்தன் (வயது 45), அவரின் உறவினரான சிவசுப்பிரமணியம் சிவரூபன் (வயது 30) இவரின் சகோதரி என மூவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டில் சில நாட்களுக்கு முன்னர் பூப்புனித நீராட்டுவிழா இடம்பெற்றிருந்தது. இந்நிலையிலேயே அந்த வீட்டுக்குள் நேற்று நள்ளிரவு தாண்டிய பின்னர் மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை வாளால் வெட்டிக் காயப் படுத்தி விட்டு நகைகளை பறித்துச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

இதில், வீட்டிலிருந்த பெண்கள் அணிந்திருந்த 10 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டன. வீட்டில் சி. சி. ரீ. வி. கமெரா கண்காணிப்பு இருந்த நிலையில், கொள்ளையர்கள் அதன் ஹாட்டிஸ்கை கழற்றி தருமாறு அங்கிருந்தவர்களை மிரட்டியுள்ளனர். எனினும், அதற்குள் அயலவர்கள் வர ஆரம்பிக்கவே அங்கிருந்து கொள்ளையர்கள் தப்பிச் சென்றனர் என்று அறிய வருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# திருவள்ளுவர் தின பரிசளிப்பு நடந்தது

*யாழ்ப்பாணம், ஜூன் 13*

உலக இளையோர் திருக்குறள் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை திருவள்ளுவர் தினப் பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு நிறைவு விழாவும் இடம்பெற்றது.

கோண்டாவில் தனியார் மண்டபத்தில் மன்றத்தின் தலைவர் கலாநிதி வலன்ரீனா இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராஜா பிரதம விருந்தினராக பங்கேற்றார்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வலிகாம வலய கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கமலநாதன், மண்டப உரிமையாளர் கலாநிதி செ. திருமாறன் ஆகியோர் நிகழ்வில் விருந்தினர்களாக பங்கேற்றனர். (ஐ)



# உரும்பிராயில் விபத்து; இரண்டு பேர் படுகாயம்!

*யாழ்ப்பாணம், ஜூன் 13*

மோட்டார் சைக்கிளும் பேருந்தும் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து, நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மாலை யாழ். - பலாலி வீதியில் உரும்பிராய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து புன்னாலைக்கட்டுவன் நோக்கி பயணித்த தனியார் பேருந்து கோப்பாய் - மானிப்பாய் வீதியில் உரும்பிராய் சந்தியில் சடுதியாக வீதியை கடக்க முயற்சித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)



# நெடுந்தீவில் 300 பேருக்கு உணவு பொதி அன்பளிப்பு

*மானிப்பாய், ஜூன் 13*

நெடுந்தீவில் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த உதவி தேவைப்படும் 300 பேருக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவரான விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு அறக் கட்டளையின் இலங்கை நிர்வாகியான செயலாளர் ந. விந்தன் கனகரட்ணம், யாழ். தீவக சிவில் சமூக பொறுப்பாளர் க. குணாளன், பிரபல தொழிலதிபரான மு. அகிலன், பூமணி அம்மா அறக்கட்டளையின் பொருளாளர் எஸ்.கீர்த்தனா நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை குருவானவர் பி.எஸ்.றொக்ஷன் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-5)

# அதிக விலைக்கு பொருட்கள் 7 கடைகளுக்கு எதிராக வழக்கு

*யாழ்ப்பாணம், ஜூன் 13*

யாழ்ப்பாணத்தில் பாவனையாளர் அதிகார சபையினர் நடத்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 7 வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையின் கீழ் அதிகார சபையினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதிகளில் வியாபார நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.

இதன்போது, அரிசியை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த ஐந்து விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துனட், நூடில்ஸ் மற்றும் பிஸ்கெற் வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்தமைக்காக இரண்டு விற்பனை நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேபோன்ற, திடீர் பரிசோதனைகள் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடத்தப்படும் என்று அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# அடிகாயங்களுடன் வவுனியாவில் சடலம்!

*வவுனியா, ஜூன் 13*

வவுனியாவில் அடி காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பஸார் வீதியில் உள்ள கடைத் தொகுதி பகுதியிலுள்ள நகைக்கடை ஒன்றின் முன்பாகவே இந்த சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்டவர் நகரப் பகுதியில் சுமை கூலியாக செயல்படுபவர் என்று அறிய வருகின்றது.

சடலத்தை கண்டவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே பொலிஸார் சடலத்தை மீட்டனர். மீட்கப்பட்ட சடலத்தில் தலை, கால் உள்ளிட்ட பகுதிகளில் அடி காயங்கள் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மக்கள் போராட்டம் பெருமளவு வெற்றி!

## வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, ஜூன் 13

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமை விவகாரத்தை தோற்கடிக்க பஸில் ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. இதைத் தொடர்ந்து அரசியலமைப்பின் ஊடாக வெளியேற்றப்படுவதற்கு முன்னர் அவர் கௌரவமான முறையில் பாராளுமன்ற உறுப்புரிமையை துறந்துள்ளமை வரவேற்கத்தக்கது. அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் பெருமளவில் வெற்றிபெற்றுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மேலும், அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமையுடைய நபர் அரசியலில் செல்வாக்கு செலுத்த தகுதியற்றவர் என்ற ஏற்பாடு உள்வாங்கப்பட் டுள்ளமை வரவேற்கத்தக்கது.

21ஆவது திருத்தத்தில் இரட்டை குடியுரிமையுடைய நபருக்கு தடை விதிக்கும் வகையிலான திருத்தத்தை இரத்து செய்ய பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே அவர் 21ஆவது திருத்தம் ஊடாக வெளியேற்றப்படுவதற்கு முன்னர் கௌரவமான முறையில் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்துள்ளார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களில் பெரும்பாலான அதிகாரங்கள் பாராளுமன்றுக்கு வழங்கப்பட வேண்டும். தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் தெரிவு செய்யப்பட்டவரல்ல, ஆகவே பிரதமர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை பயன்படுத்துவது சிக்கல் தன்மையானது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட வுடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்து செய்ய அவதானம் செலுத்த வேண்டும். மாகாண சபை முறைமை, தேர்தல் முறைமை குறித்து முரண்பாடற்ற தீர்மானத்தை மேற்கொண்டதன் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வது குறித்து விசேட அவதானம் செலுத்த வேண்டும்.

சிறீ லங்கா பொது ஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் முன்னெடுத்த போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தவிர்த்து ஏனைய ராஜபக்ஷர்கள் அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு நாட்டு மக்கள் வலியுறுத்தி வரும் நிலையில் அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதி பதவி விலகுவது சாத்தியமற்றது. நாட்டு மக்களின் போராட்டம் பெரும்பாலும் வெற்றிபெற்றுள்ளது. (ஐ)

# ஒருநாள் சேவையில் வழங்கப்படும் கடவுசீட்டுகளை அதிகரிக்க திட்டம்

## குடிவரவு - குடியகல்வு திணைக்களம்

கொழும்பு, ஜூன் 13

**ஒருநாள் சேவையின் கீழ், தினசரி வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.**

பத்தரமுல்லையில் உள்ள திணைக்கள அலுவலகத்துக்கு கடவுச்சீட்டைப் பெறுவதற்காக வருகை தரும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தில் வழமையாக ஒரு நாள் சேவை மூலம் 2,000 கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை 3,500 ஆக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், திணைக்கள ஊழியர்களை இரண்டு தனித்தனி பிரிவுகளாகப் பிரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் பிரிவினர் காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரையிலும், இரண்டாவது பிரிவினர் மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரையிலும் செயல்படுவர்.

இதேவேளை, அடுத்த வருடம் முதல் அனைத்து மாவட்ட செயலகங்கள் ஊடாக கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பிரதான மற்றும் பிராந்திய அலுவலகங்களில் கடவுச்சீட்டு வழங்குவதைப் போன்றே இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு, கடவுச்சீட்டைப் பெறும்போது, திணைக்களத்துக்குள் இருக்கும் நெரிசலைக் குறைக்கும் என்று நம்புவதாக தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நாட்டை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து, குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தில் கடவுச்சீட்டை பெற இரவு வேளைகளிலும் மக்கள் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தம்மிக பெரேரா எம்.பியின் இல்லம் முன்பாக எதிர்ப்பு!



கொழும்பு, ஜூன் 13

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேராவின் இல்லத்துக்கு முன்பாக சிலர் நேற்றைய தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர், அரசியலுக்கு வருகை தந்தமையை எதிர்த்தே அவரின் கொழும்பு இல்லம் முன்பாக எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தனது தேசியப் பட்டியல் எம்.பி பதவியை இராஜிநாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு வர்த்தகர் தம்மிக பெரேரா நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மல்லாவியில் குடும்பஸ்தர் வீதியில் வெட்டிக் கொலை!

முல்லைத்தீவு, ஜூன் 13

பிறந்தநாள் நிகழ்வு ஒன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு - மல்லாவி - பாலிநகரிலேயே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டது. உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அழகப்பன் அமிர்தலிங்கம் (வயது 40) என்று அறிய வந்துள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு பிறந்த நாள் வீடு ஒன்றில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பியபோதே இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# செயன்முறை பரீட்சை இன்று நடைபெறாது!

கொழும்பு, ஜூன் 13

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பொருளியல் தொழில்நுட்ப செயன்முறை பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை நடைபெற மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஐந்து வருடங்களில் நாங்கள் நாட்டை கட்டியெழுப்புவோம்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜூன்13

“ராஜபக்ஷக்களால் சீரழிக்கப்பட்ட எமது நாட்டை உண்மையான மக்கள் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன இன்னும் ஐந்து வருடங்களுக்குள் நிச்சயமாகக் கட்டியெழுப்பும்” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “அரசு மக்கள் அபிப்பிராயத்தை அப்பட்டமாக மீறி, அதைக் கிடப்பில் போட்டது. மக்களுக்குத் துரோகம் செய்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தோல்வியடைந்த அரசு இன்று ஆடைகளை மாற்றிய வண்ணம், ஒவ்வொரு நபர்களை மாற்றி அதிகாரத்தை உறுதிப்படுத்த முயன்றாலும், இதிலிருந்து இந்நாட்டின் அழிவுப் பாதை நிற்காது.

புதிய மக்கள் அபிப்பிராயத்தின் மூலம் இந்நாடு கட்டியெழுப்பப்பட வேண்டும். நிலையற்ற தன்மைகளால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது” - என்றார். (ஐ)

# திரிபோஷா உற்பத்தி ஆரம்பம் உலக உணவு திட்டம் நிதியுதவி!

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் மூலப்பொருட்கள் பற்றாக்குறை காரணமாக நிறுத்தப்பட்டு இருந்த திரி போஷா உற்பத்தி மீளவும் ஆரம்பிப்பதற்கான நிதியுதவியை வழங்க உலக உணவுத் திட்டம் இணக்கம் தெரிவித்துள்ளது.

உலக உணவு திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் நிதியுதவியை வழங்க இணக்கம் தெரிவித்தனர் என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் திரிபோஷா உற்பத்தி மூலப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக திரிபோஷா உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. இதனடிப்படையில் திரிபோஷா உற்பத்திக்கு தேவையான சோளம் உள்ளிட்ட மூலப்பொருட்களை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக உலக உணவு திட்டத்தின் நிதி உதவியுடன் திரிபோஷ உற்பத்தியை நாட்டில் மீள ஆரம்பிக்க முடியும் - என்றார். (ஐ)

## மே 9 வன்முறை; 2725 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 13

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் மேலும் 21பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய அன்றைய தினம் பதிவான 857 வன்முறை சம்பவங்கள் தொடர்பில் இது வரையில் 2,725 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் 1,083 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## நீரில் மூழ்கி மூவர் மரணம்!

கொழும்பு, ஜூன் 13

குருநாகல், அநுராதபுரம் மாவட்டங்களில் மூவர் நீரில் மூழ்கி பலியாகினர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவங்கள் குறித்து மேலும் அறிய வருவதாவது,

குருநாகல், தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லுணுவெள வாவியில் நீராட சென்ற இருவர் நீரில் மூழ்கி மரணமடைந்தனர் என்று தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அஹூங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 19, 27 வயதுகளையுடையவர்களே இவ்வாறு மரணமாகினர்.

இதேவேளை, கொழும்பு - பாதுக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுகும்கந்தை 06ஆம் மைல்கல் பகுதியில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சியில் நீராடிய ஒருவர் மரணமானார்.

பாதுக்க, போப்பே பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார். (கே)

# மனிதாபிமான பேரழிவில் இலங்கை; குவாட் அமைப்பின் கவனம் அவசியம்!

## அமெரிக்க செனட் சபை வலியுறுத்து



**வாஷிங்டன், ஜூன் 13**

**ராஜபக்ஷக்களின் நிருவாகத்தின் கீழ் இலங்கையானது மனிதாபிமானப் பேரழிவின் விளிம்பில் உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுவின் தலைவர் ரொபட் மெனெண்டஸ் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பு இலங்கைமீது அதீத கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர், குவாட் நாடுகளில் வெளிவிவகார அமைச்சர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அந்தக் கடிதத்தில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் கூட்டத்தொடரின்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்த அறிக்கையை வெளியிடும்போது குவாட் அமைப்பின் நான்கு அங்கத்துவ நாடுகளும் பேரவையில் ஏகோபித்து நிற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளித்தல், பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் குவாட் அமைப்பு கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு இராஜதந்திர ரீதியான ஒற்றுமை உதவியாக அமையும்.

ரோக்கியோவில் குவாட் நாடுகளின் மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதில் இந்தோ-பசுபிக் கட்டமைப்பின் அங்கமாக குவாட் எனப்படும் நாற்கர நாடுகள் தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. இதனை அடிப்படையாக வைத்தும் மேலும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டும் இக்கடிதத்தை குவாட் அமைப்பின் வெளிவிவகார பிரதிநிதிகளுக்கு அனுபபுகின்றேன்.

ரோக்கியோவில் நடைபெற்ற குவாட் கூட்டமானது கொரோனா தடுப்பூசி திறனை அதிகரித்தல், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல், சைபர் பாதுகாப்பு, விண்வெளி மற்றும் பிற முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் உள்ளிட்ட விடயங்களில் ஏகோபித்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடல்சார் கள விழிப்புணர்வுக்காக புதிதாக தொடங்கப்பட்ட இந்தோ-பசுபிக் கூட்டாண்மையானது, கூட்டு கடல்சார் திறன் மற்றும் தகவல் பகிர்வு ஆகியவற்றை உருவாக்குவதற்கான முக்கியமானதொரு படியாகும். இதேபோல், 13 நாடுகளின் கூட்டில் உருவாகியுள்ள இந்தோ-பசுபிக் பொருளாதாரக் கட்டமைப்பில் குவாட்டின் நான்கு அங்கத்துவ நாடுகளும் பங்கேற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கும் விடயமாகும்.

ஒரே எண்ணப்பாட்டைக் கொண்ட பங்காளித்தரப்புக்களிடையே பொருளாதார ஒருங்கிணைப்பை ஆழமாக்குவதற்கான முதற்படியும் இதுவாகும் என்பதோடு இதற்கு அமெரிக்காவின் இரு சபைகளினதும் ஆதரவும் காணப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு இந்திப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி பேரழிவின் பின்னர் நான்கு நாடுகளின் கூட்டின் பிரதிபலிப்பாகவே குவாட்டின் தோற்றம் காணப்படுகின்றது. அவ்விதமான குவாட்டின் செயல்பாடுகள் தற்போது பரந்துபட்டதாகவும் தாக்கங்களை ஏற்படுத்தவல்லதாகவும் காணப்படுகின்றது. இந்நிலையில், பிராந்தியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவல்லதாக, உள்ள குவாட் அமைப்பானது, இலங்கையில் மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தவல்ல பொருளாதார சீரழிவை தவிர்ப்பதற்கு வழிகுத்துச் செயல்படுவதற்கான இயலுமை காணப்படுகின்றது.

ராஜபக்ஷக்களின் நிர்வாகத்தின் கீழ், இலங்கையில் நிதி அழிவு இடம்பெற்றுள்ளதோடு, மனிதாபிமானப் பேரழிவின் விளிப்புக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் நாட்டை நேரடியாக சீனாவின் கடன்பொறிக்குள் இட்டுச் சென்றுள்ளார். அவருடைய சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ, இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக கடன்களை மீளச் செலுத்துவதற்கான விவேகமான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தவறிவிட்டார்.

இந்தப் பின்னணியில் அனைத்து இலங்கையர்களும் மாற்றத்துக்கான நேரம் தற்போது ஏற்பட்டுள்ளது என்ற அடிப்படையில் எழுச்சிபெற்று வருகின்றார்கள். இலங்கைக்கு கடன்கள் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு புதுடில்லி ஏற்கனவே செயலூக்கமான பங்களிப்பை ஏற்கனவே ஆரம்பித்துள்ள நிலையில் வாஷிங்டன் நீண்டகால பொருளாதார ஆதரவினை தயாரித்து வருகின்றது. அதேபோன்று, ரோக்கியோவும், கன்பராவும் உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

அந்தவகையில் 'குவாட் மனிதாபிமான மற்றும் பேரிடர் நிவாரண பொறிமுறை' உருவாக்குவதன் மூலமாக பெரும் வகிபாகத்தை குவாட் அமைப்பு வகிக்க முடியும் என்பதோடு இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் மாறிவரும் சூழல்களுக்கு ஏற்றவாறான அனைத்து சவால்களையும் சமாளிக்க முடியும் என்பதையும் நிரூபிக்க முடியும் - என்றுள்ளது. (ஐ)

# சர்வதேச நாடுகளிடம் பிச்சையெடுக்கிறது நாடு

## மரிக்கார் எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13

நாட்டில் 50 இலட்சம் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது என்றும் நாடு இன்று ஏனைய நாடுகளிடம் பிச்சை எடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பார்க்கிர் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலு வலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். மேலும்,

வரலாற்றில் என்றுமில்லாத ஒரு நெருக்கடி நிலையை நாடும் நாட்டு மக்களும் தற்போது எதிர்கொண்டுள்ளனர். உலக நாடுகளின் பட்டியலில் மிகவும் மோசமான நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

எமது சம்பிரதாயப்பூர்வ நண்பர்கள் எம்மிடமிருந்து விலகிவிட்டனர் என்றும் பிரதமர் கருத்துரைத்திருந்தார். ஜப்பான் போன்ற நாடுகளின் நட்புறவில் ஏற்பட்ட விரிசில் குறித்தும் அவர் தெரிவித்திருந்தார்.

அந்த நட்புறவை மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதில் சவால்கள் காணப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்திருந்தார். இவ்வாறான ஒரு நிலைமைக்கு நாடு ஏன் சென்றது? எனினும் நடந்த தவறுகளுக்காக ஒருவருக்கு ஒருவர் விரல் நீட்டிக்கொண்டு இருக்கும் தருணம் இதுவல்ல.

எமது மக்கள் வாழ்வதற்கான போராட்டத்திலேயே தற்போது உள்ளனர். கண்ணீர், வேதனையுடன் வாழ்கின்றனர். இவை அனைத்தையும்விட நம்பிக்யை இழந்த நிலையில் எமது மக்கள் வாழ்கின்றனர். இன்றைய நாளேடுகளின் முதல் பக்கத்தில் ஐக்கிய நாடுகள் சபை விடுத்த கோரிக்கை தொடர்பிலான செய்திகளே பிரதான இடத்தைப் பிடித்துள்ளன.

நாட்டில் 50 இலட்சம் மக்கள் பட்டியினில் வாடுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. அதுபோன்று, 56,000 சிறுவர்கள் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

கொழும்பில் மட்டும் இரண்டு இலட்சம் மக்கள் தமது உணவுத் தேவைக்காக நகைகளை அடகு வைத்து உண்ணும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை நாம் எமது அரசியல் சுயலாபத்துக்காக கூறவில்லை. உலகத்தின் முன்னால் எமது நாடு மிகவும் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதையே இந்த அறிக்கை உணர்த்துகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருந்த இலங்கையா னது ஓர் இடத்தில் குறைந்த வருமானத்தை பெறும் நாடாக மாறி யது. இன்று பிச்சையெடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட் டுள்ளது.

எமது சம்பிரதாயபூர்வ நண்பர்கள் எமது நாட்டுக்கு உதவுவதை நிறுத்திக்கொண்டுள்ளனர். இன்று ஐக்கிய நாடுகள் சபையினூடாக உலக நாடுகளிடம் நிதியை கோரும் நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது - என்றார். (கே)

## பொசன் தினத்தை முன்னிட்டு 173 கைதிகளுக்கு விடுதலை!

கொழும்பு, ஜூன் 13

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 173 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவின் பரிந்துரையின் பேரில் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய அதிகபட்சமாக 23 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மேலும் குருவிட்ட, மஹர, நீர்கொழும்பு, வீரவில, வாரியபொல, போகம்பரை, அனுராதபுரம், களுத்தறை, கொழும்பு மகசின் சிறைச்சாலை, கேகாலை, மட்டக்களப்பு, மொனராகலை, பல்லான்யா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண சிறைச்சாலை சிறைக் கைதிகளுக்கும் இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது. (ஐ)

# இயற்கை விவசாயம்தான் இலங்கையின் வீழ்ச்சிக்குக் காரணமா?

**இலங்கையின் பொருளாதார நிலைக்குலைவு உலகம் முழுவதும் பேசப்படுகிறது. கூடவே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இயற்கை விவசாயமும் பேசப்படுகிறது. இதற்கான காரணம், இன்று இலங்கையில் உணவுப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டுக்கு, உணவுப் பொருட்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்திருப்பதும் ஒரு காரணம். இதற்கு, 'ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகளைத் தவிர்ப்பது' என்று முடிவெடுத்து தடையை அமலாக்கியது ஆகும். பின்னர் இந்தத் தடையை நீக்கினாலும் உற்பத்தி வீழ்ச்சியைத் தவிர்க்க முடியவில்லை. இதன் தொடர்ச்சியாக இயற்கை விவசாயத்துக்கு எதிராக உலகெங்கும் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன. இந்த எந்த அளவுக்கு உண்மை? இதன் பின்னணி என்ன? டெட் நார்தௌஸ் பேட்டி நமக்கு ஒரு சித்திரத்தை அளிக்கிறது. நாம் அவரது கருத்துகளில் முரண்படலாம். ஆனால், விவாதிக்க வேண்டிய ஒன்று இந்தப் பேட்டி**

அமெரிக்கரான டெட் நார்தௌஸ், 'தி பிரேக்த்ரூ இன்ஸ்டிடியூட்' அமைப்பின் இயக்குநர். 1966இல் பிறந்த இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார். மைக்கேல் ஷெல்லன் பர்கருடன் இணைந்து 2003இல் இந் நிறுவனத்தை நிறுவினார்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முக்கியம் என்று பேசும் அதேசமயம், 'சுற்றுச்சூழலியலாளர்கள் அச்சுறுத்துகிறபடி உலகம் அவ்வளவு சீக்கிரம் அழிந்தெல்லாம் போய்விடாது!' என்றும் பேசுபவர். இயற்கை வளங்களை நவீனத் தொழில்நுட்பங்கள் உதவியுடன் அளவோடு பயன்படுத்தி வளமாக வாழலாம் என்கிறவர். அணுசக்தியையும் நகரமயமாக்கலையும் இணைத்து வளம் பெற முடியும் என்றும்கூட பேசுபவர். அவருடைய பல கருத்துகளைச் சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இத்தகு சூழலில் சமீபத்தில் வெவ்வேறு இதழ்களுக்கு அளித்த பேட்டியில், இலங்கைச் சூழலையும்கூடப் பேசியிருக்கிறார். டெட் நார்தௌஸ் பேசும் பல விஷயங்கள் அன்றைய நிலையில் அவசியம் என்பதால், அவருடைய பேட்டிகளிலிருந்து தொகுக்கப்பட்ட விஷயங்களை இங்கே நாம் பார்க்கலாம்.



### பருவநிலை மாற்றத்தை எப்படிப் புரிந்துகொள்வது?

பருவநிலை மாற்றம் தொடர்பான இப்போதைய கொள்கை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் கடுமையாக இருப்பதால் அதில் மாற்றம் அவசியம். தூய்மையான ஆற்றலைப் பெற உயர் தொழில்நுட்பங்களில் அதிகம் முதலீடு செய்ய வேண்டும். தொழில்நுட்பங்களில் அதிகம் முதலீடு செய்வதால் சுற்றுச்சூழல் தரம் மேம்படுவதுடன் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரமும் அதிகரிக்கும்.

### இயற்கை விவசாயம் நஷ்டம்தான் தருமா?

அப்படியெல்லாம் சொல்ல முடியாது. இயற்கை விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது நீங்கள் அடிப்படையாகப் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், அது ஒரு விசேஷமான விஷயம். பணக்கார நாடுகளில் இயற்கை விவசாய சாகுபடி லாபகரமானதாக இருக்கலாம் காரணம், தங்களுடைய விளைபொருள்களுக்கு அதிக விலை வைத்து, வாங்க முடிந்த பணக்காரர்களுக்கு அவர்களால் எளிதில் விற்றுவிட முடியும். இதற்காகத் தனிச் சந்தையை உருவாக்கிவிடவும் முடியும். எல்லா இடங்களிலும் அது சாத்தியம் இல்லை.

### ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

ரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடாமல் பயிர் சாகுபடி செய்வது என்பது செலவு பிடிக்கும் வேலை. அதோடு விளைச்சலும் கொஞ்சம் குறைவாகவே வரும். 'இயற்கை முறையில் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது, ரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடப்படுவதில்லை, எனவே இதில் நஞ்சு கலப்பதில்லை ஆகையால் விலை அதிகம்' என்று நீங்கள் கூறி விற்றால் அதற்கேற்ப அதிக விலை கொடுக்க பணக்காரர்களால் முடியும். இதையே நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மேற்கொள்ள ஆரம்பித்தால், பெரும் நாசமே உண்டாகும்.

### எப்படிச் சொல்கிறீர்கள்?

இயற்கை விவசாயத்தில் உற்பத்தியாகிற பொருட்களை எல்லோராலும் அதிக விலை கொடுத்து வாங்க முடியாது. விளைச்சல் குறைவாகி விடும்போது, எல்லோருமே இயற்கை விவசாயம் மூலம்தான் சாகுபடி செய்கிறார்கள் என்பதால் சந்தையில் விலையையும் அதிகப்படுத்தி விற்றுவிட முடியாது. எனவே முதலில் சாகுபடியாளர்களுக்கு நஷ்டம் ஏற்படும். சந்தைக்கு வரும் உணவு தானியங்களின் அளவும் குறையும். இது பிறகு விலையுயர்வுக்கும் பற்றாக் குறைக்கும் வழிவகுக்கும். விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள், மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

### விவசாயிகள் இதனால் எப்படிப் பாதிப்புள்ளாவார்கள்?

எப்படியென்றால், இந்த விலையுயர்வு சாகுபடியாளர்களுக்குப் பயன் தராது. அப்புறம் இதனால் சுற்றுச்சூழலுமே கெடும்! வழக்கமான உரம் - பூச்சிகொல்லி சாகுபடியைவிட புதிய முறையும் தன் பங்குக்கு சூழலைக் கெடுக்கும். பசுமை இல்ல வாயுக்களின் வெளிப்பாடு, நைட்ரஜன் வெளியேற்றம், நிலப் பயன்பாடு காரணமாக சூழல் மேலும் கெடும். சாகுபடி குறைந்தால் ஏற்றுமதியும் குறையும்.

### இலங்கை நிலைமையை எப்படிப் பார்க்கிறீர்கள்?

கொரோனா பெருந்தொற்றால் நாடு மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இயற்கை விவசாய சாகுபடி முறைகளுக்கு மாறுமாறு அனைவரையும் கட்டாயப்படுத்தியது இலங்கையில் பேரழிவுக்கே இட்டுச் சென்றது. கோத்தபய ராஜபட்ச சற்றே நிதானத்துடன் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்க உத்தரவிட்டிருந்தால் மிகக் குறுகிய காலத்தில் இந்த அளவுக்குப் பேரழிவு ஏற்பட்டிருக்காது. முழுக்க மாறுவதற்குப் பதிலாக, பெருமளவு ரசாயன உரப் பயன்பாட்டையும் தொடர்ந்து அனுமதித்திருந்தால் சாகுபடி சரிந்திருக்காது. செயற்கை ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தால், அதை வேகமாகச் செய்தாலும், நிதானமாகச் செய்தாலும் - விளைச்சலும் ஏற்றுமதியும் நிச்சயம் குறையும்.

### சரி, மாறிவரும் சுற்றுச்சூழல் கேடுகளுக்கு மத்தியில் இந்த விஷயங்களை எப்படி அணுகுவது?

நிதான அணுகுமுறைதான் நமக்குத் தேவை. கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியவற்றின் பயன்பாட்டை நம்மால் ஒரேயடியாகக் குறைக்கவோ கைவிடவோ முடியாது. அப்படிச் செய்வதற்கு நிறைய காலம் பிடிக்கும். அவ்வாறு செய்து முடிக்கும்போது ஆற்றலுக்காக நாம் அதிகம் செலவிட வேண்டிய நிலையில்தான் இருப்போம். இப்போது உரங்களின் விலை அதிகரிப்புக்குக் காரணம் இயற்கை எரிவாயுவின் விலை அதிகரித்துவிட்டதுதான்.

மின்சாரம் தயாரிக்கவும் வாகனங்களை இயக்கவும் பெட்ரோல், டீசல், இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியும் என்ற நிலையை உருவாக்கினாலும்கூட சிமென்ட், செயற்கை உரம், உருக்கு ஆகியவற்றைத் தயாரிக்க இந்த ஆற்றல் வளங்கள் அவசியம்.

### ஆனால், ரசாயன உரங்கள் கொடியவை என்கிறார்களே?

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மானிய விஞ்ஞானிகள் பிரிட்ஸ் ஹேபர், கார்ல் பாஷ் ஆகியோர் இணைந்து உருவாக்கிய அதிக அழுத்தம் மூலம் வேதி விளைவை ஏற்படுத்தி அம்மோனியா தயாரிக்கும் நடைமுறையால்தான் இன்று உலகின் சரிபாதி மக்கள் பட்டினி கிடக்காமல் வயிறார உணவு தானியங்களைச் சாப்பிட முடிகிறது.

இந்தத் தயாரிப்புச் செலவைக் குறைக்கும் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்க வேண்டும் அல்லது மண்ணில் நேரடியாக நைட்ரஜனை செறிவூட்ட மரபணு மாற்றப்பட்ட நுண்ணுயிரிகளைப் பயன்படுத்த வழிகாண வேண்டும்.

பருவநிலை மாற்றம் மற்றும் சூழல் கேடு நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. புவி வெப்பமடைவதைக் குறைப்பதும் அவசியம். ஆனால், இதோ உலகம் அழியும் காலம் வந்துவிட்டது என்று அனைவரையும் பீதியில் ஆழ்த்துவதும், இன்ன தேதிக்குள் பெட்ரோல்-டீசல் பயன்பாட்டைக் கைவிட வேண்டும் என்றெல்லாம் கெடு நிர்ணயிப்பதும் வேண்டாத வேலை.



இவற்றுக்குப் பின்னால் அறிவியலைவிட அரசியல்தான் அதிகம் இருக்கிறது. இப் போதே நவீனத் தொழில்நுட் பங்களாலும் மாற்று உற்பத்தி முறைகளாலும் காற்றில் நஞ்சு கலப்பது குறைந்துகொண்டிருக்கிறது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# சம்பிக்க ரணவக்க போன்ற அரசியல்வாதிகளே தற்போது எமக்கு வேண்டும்!

## “லங்காதீப” புகழாரம்

சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக்கு தீர்வு காண நான்கு முன்மொழிவுகளை முன்வைத்த முன்னாள் அமைச்சரும் ‘43 பிரிகேட்’ (நான்கு மூன்று படையணி) என்ற அமைப்பின் தலைவருமான சம்பிக்க ரணவக்க போன்ற அரசியல்வாதிகளே தற்போது எமக்கு வேண்டும் என்று சிங்கள நாளேடான “லங்காதீப” புகழாரம் சூட்டியுள்ளது.

“லங்காதீப” நாளேட்டில் வெளியான “எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடம் இருந்து கேட்ட நேர்மறையான உரை” எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் முழுமையான தமிழ் வடிவம்:

நாளைய நம்பிக்கை இல்லாமல் நாட்டில் வாழ்வதே பெரும் அவலம். அந்த கர்மாவை இன்று நாம் செலுத்துகிறோம். வாகனத்திற்கு பெற்றோல் கிடைக்குமா என்று தெரியவில்லை. வேலைக்குச் செல்ல பேருந்து இருக்கிறதா என்பதை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் முடிவு செய்கிறார்கள். ஒரு பனீஸ் சாப்பிடுவது மற்றும் காலை உணவை நிறைவாக அருந்துவது கூட பாரிய செலவாகும். வருமானம் தவிர மற்ற அனைத்தும் அதிகரித்து வருகின்றது. மக்களின் நீண்ட வரிசைகள், போராட்டங்கள் மற்றும் பேரணிகள் முடிவற்றவையாக தொடர்கின்றன.

இந்நிலையைப் பற்றிப் பேசாதவர்களே இல்லையென்றாலும், நடந்ததைத் தொடர்ந்து பேசுபவர்கள் பலர். மாறாக, ஒரு நாடாக நாம் எப்படி அடுத்து தலைதூக்க வேண்டும் என்ற அர்த்தமுள்ள பேச்சுக்கள் அதிகம் கேட்கப்படுவதில்லை. தொன் கணக்கில் பதுக்கல்காரர்களுடன் நாடு படுகுழியில் வீழ்வதைப் பற்றிப் பேச பெரும்பாலான அரசியல்வாதிகளும் ஆர்வமாக உள்ளனர்.

அவர்களில் நாட்டை மீளக் கட்டியெழுப்பக்கூடிய வழிகள் பற்றிய திட்டவட்டமான யோசனையுடன் அர்த்தமுள்ள வகையில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களும் உள்ளனர். அவர்களுள் அண்மையில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்துக்கள் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகத் தெரிகிறது.

நாரஹேன்பிட்டியில் உள்ள 43 ஆவது படைப் பிரிவு அலுவலகத்தில் நாட்டின் பொருளாதார வங்குரோத்து நிலைக்கு தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நான்கு முக்கிய கருப்பொருள்கள் மீதான விவாதங்கள், அந்தத் துறைகளில் உள்ள பிரச்சனைகள் மற்றும் அவற்றைத் தீர்க்கப் பயன்படும் அரசு மற்றும் பொருளாதாரக் கருவிகள் குறித்தும் கவனம் செலுத்துவது.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு



அரசாங்கத்திடம் முன்மொழிவுகளை சமர்ப்பித்ததன் தனித்துவத்தை நாம் காண்கிறோம். எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அடிக்கடி அவமானங்களையும் குற்றச்சாட்டுகளையும் மட்டுமே கூறுகிறார்கள். அது அவர்களின் உரிமை என்றாலும், நாடு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடியின் வடிவங்கள் குறித்தும் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை எதிர் காலத்தில் வாக்குகளைப் பெறும் திட்டமாக தற்போதைய அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டி பயனில்லை. நாளை பொதுத் தேர்தல் நடத்தப்பட்டாலும், தற்போதுள்ள சூழ்நிலையில் இருந்து நாடு ஓரளவு மீண்டு வர வேண்டும். அந்த வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சில சாதகமான முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் மூலம் தெரிய வருகின்றது.

மருந்து தட்டுப்பாடு, பஞ்சத்தால் ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாடு, அதிகரித்து வரும் நோய் மற்றும் இறப்பு, எரிசக்தி நெருக்கடியுடன் கூடிய தொழில் நெருக்கடி, சேவைகள், வர்த்தக சரிவு, வேலை சரிவு, வருமான இழப்பு மற்றும் வங்கி அமைப்பின் சரிவு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாக தற்போதுள்ள இரண்டு எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களுக்கு கூடுதலாக மற்றொரு நிறுவனத்தை அமைப்பதன் மூலம் போட்டியை அதிகரிப்பது முன்மொழிவுகளில் ஒன்றாகும். இவ்வாறானதொரு பிரேரணையை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சமர்பிப்பது மிகவும் முக்கியமானது என்பதுடன், நாட்டின் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு உரிய நேரத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் முக்கிய பிரச்சனை டொலர் பற்றாக்குறை. எண்ணெய் கொள்கலன்களுக்கு பணம் செலுத்த டொலர்கள் இன்மையால் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டது. இது எண்ணெய்க்கான நீண்ட வரிசைகள் வழியாகத் தொடர்ந்தது. நாட்டை மணிக்கணக்கில் மின்வெட்டு நிலைக்கு இழுத்து, “கோட்டா கோ கம“ விற்கு வழி வகுததது. இரசாயன உரங்கள் இல்லாததால் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையும் எரிசக்தி நெருக்கடியின் ஒரு விளைபொருளாகும். ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆனால், இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். சம்பிக்க ரணவக்கவின் அறிக்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களில் இருந்து அவர் அதை நன்கு புரிந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். அந்த புரிதலுடன் தான் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடமளிக்க வேண்டும் எனவும், முதல் நாளிலேயே அவரை தாக்குவது தவறு எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

பிரச்சினைகள் பிரச்சினைகளாக மாறி நெருக்கடிகளாக மாறிக்கொண்டே செல்வதால் நாடு பெரும் ஆபத்தில் உள்ளது. அந்த ஆபத்தை முன்னிறுத்தி, இனி ஒருவரையொருவர் கழுத்தை இறுக்கிக் கொள்வதில் அர்த்தமில்லை. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் கையில் பணம் இருந்தாலும் உணவு இல்லாமல் போகும் நிலைக்கு நாடு உருவாகும் என்று எந்தக் குடிமகனும் அதுவரைக்கும் காத்திருக்க முடியாது. சராசரி குடிமகனை விட அரசியல்வாதிகளுக்கு வலுவான பொறுப்பு இருக்க வேண்டும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இயன்றளவு பங்களிப்பை வழங்காவிடின், அவர்களும் நாட்டை அதல பாதாளத்திற்குக் கொண்டு செல்வதில் பங்காளிகளாக முத்திரை குத்தப்படுவார்கள்.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அரச பதவிகளை ஏற்காமல் நாட்டின் நலனுக்காகத் தாம் நினைக்கும் முன்மொழிவுகளை முன்வைத்து தேசியப் பொறுப்பொன்றை நிறைவேற்றியுள்ளார். அரசாங்கத்தின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் முன்னிலை வகிக்கும் ஏனைய அரசியல்வாதிகளும் இப்பாதையைத் தெரிவு செய்தால் அரசியல் செய்வதற்கு நாடே மிச்சமாகும். மக்கள் பிச்சை எடுக்காமல் வாழும் நாடு உருவாகும்.

# இயற்கை விவசாயம்தான்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தூய்மையான சூழலும் உருவாகிறது. இப்படிச் சொல்வதற்காக மானிடர்களைக் கொத்து கொத்தாக கொல்ல நினைக்கும் கொலை காரன் என்று சூழலியலாளர்கள் என்னைச் சாடியுள்ளனர். இது அபத்தம்.

### சரி, சுற்றுச்சூழலை எப்படித்தான் ஆக்கபூர்வமாக அணுகுவது?

பருவநிலை மாற்றம் அதிகமாகாமல் இருக்க, புவியின் வெப்பத்தைக் குறைக்க உடனே செயல்பட்டாக வேண்டும், காலம் வேகமாகக் கடந்துகொண்டிருக்கிறது என்று உலக நாடுகளுக்கு இடையிலான அரசுகளின் கூட்டறிக்கை எச்சரிக்கிறது.

இந்த எச்சரிக்கைகளும் இலக்குகளும் தான்தோன்றித்தனமானவை, அறிவியல் அடிப்படையிலானவை அல்ல. புவி வெப்பம் அதிகமானாலும் கூட மக்களை உயிரோடு வாழ வைப்பதற்கான தொழில்நுட்பம் கிடைத்துவிட்டால் கவலைப்பட ஏதும் இல்லை.

புவி வெப்பம் குறைந்து, அதே வேளையில் மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகி, நாட்டில் பசி, பட்டினி , பஞ்சம் தலைவிரித்தாடினால் என்ன பயன்? மக்களை வாழவைக்கும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்டுபிடித்துவிட்டால் இந்த எச்சரிக்கைகள் தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை.

பனிப்போர் காலத்தில் உலக மக்கள் கரிப்புகை வெளிப்பாட்டைக் குறைக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தினர். இதனால் சூழல் தூய்மை அடைந்தது. இப்போது உக்ரைன் மீது ரஷ்யா நிகழ்த்திவரும் தாக்குதலால் கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் உலகம் இதற்கும் ஒரு மாற்று வழியைக் கண்டுபிடிக்கும்.

புவி அரசியலும் எரிசக்தித் தேவைகளும்தான் நாடுகளை சிந்திக்க வைக்கின்றன. பருவநிலை மாற்றம் என்ற தலைப்பு பேச்சுக் கச்சேரிக்குத் தான் அதிகம் பயன்படுகிறது.


புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை அதிகம் பயன்படுத்துவது, புதுப்பிக்க முடியாத புதைபடிவ எரிபொருளைத் திட்டமிட்டு சிக்கனமாகப் பயன்படுத்துவது, புவியரசியல் சார்ந்த கொள்கைகளில் கவனமாக இருப்பது ஆகியவற்றின் மூலம்தான் நாடுகள் பருவநிலை மாற்ற பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

**- டி.வி.பரத்வாஜ்**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


37. 

சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?

1) 2) 3)

38. 


காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 * 4 ⌗ 3 = 15 இங்கு * ⌗ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..................

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**13.06.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**13.06.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இதழியல் டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்!



அக்கரைப்பற்று, ஜுன் 13

தென்கிழக்கு பல்க லைக்கழகத்தில் கடந்த 2017/18 ஆம் ஆண்டில் இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்க ளுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற் றுக்கிழமை பல்கலைக்க ழகத்தின் பட்டமளிப்பு விழா கேட்போர் கூடத் தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ் வில், யாழ்ப்பாண பல்க லைக்கழகத்தின் தகைசார் பேராசிரியர் கலாநிதி ஏ. சண்முகதாஸ் மெய்நிகர் வழியில் சிறப்பு உரையாற் றினார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த இந்தப் பயிற்சிநெறியானது, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வரு டங்கள் காலதாமதமானது. எனினும், அண்மையில் நடத் தப்பட்ட இறுதிப் பரீட்சை யில் 41 மாணவர்கள் சித்திய டைந்திருந்தனர்.

இவர்களுக்கான பட்டம ளிப்பு நிகழ்வே நேற்று இடம் பெற்றது. (ஐ)

# சட்டவிரோதமாக ஆஸி. பயணம் தென்கிழக்கு கடலில் 38 பேர் கைது!

அம்பாறை, ஜுன் 13

**நீர்கொழும்பில் இருந்து இயந்திர படகு ஒன்றில் ஊடாக, சட்டவிரோதமாக அவுஸ்ரோலியாவுக்கு செல்ல முயன்ற 38 பேரை தென்கிழக்கு கடலில் வைத்து கடற்படையினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்தனர்.**

கடற்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, அவர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் கடல் பகுதியில் கண்காணிப் பில் ஈடுபட்டனர். இதன்போது, சந்தேகத்துக்கு இடமான படகை மறித்து சோதனையிட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் படகுடன் வாழைச்சேனை கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டு அம்பாறை - பாணமை பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டனர்.

கைதானவர்களில், 2 வயதுக்கும் 60 வயதுக் கும் இடைப்பட்டவர்கள் உள்ளனர். இவர்களில், மனித கடத்தல் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் என இனங்காணப்பட்ட அறுவர், ஆண்கள் 26 பேர், பெண்கள் ஐவர் மற்றும் சிறுவர்கள் 7 பேரும் அடங்குகின்றனர்.

கைதானவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்க ளப்பு, நீர்கொழும்பு பிரதேசங்களை சேர்ந்தவர் கள் என்றும் இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கபட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அக்கரைப்பற்றில் திருட்டு; இருவருக்கு விளக்கமறியல்

அக்கரைப்பற்று, ஜுன் 13

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் வீடுகள் மற்றும் வியா பார நிலையங்களை உடைத்து திருடினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

வாழைச்சேனை, கிண்ணியா பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களை உடைப்பதற் கான உபகரணங்கள் கைப் பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் மேலும் இருவரை தேடி வருவதாக நேற்றுத் தெரி வித்த பொலிஸார், தற்போதைய பொருளாதார நெருக்கடி கார ணமாக மின் சாரம் தடைப் படும் போது பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக் குமாறும் கேட் டுள்ளனர். (ஐ)

# திருக்கோவில் செயலர் பிரிவில் நிவாரண உதவிகள் வழங்கல்!



திருக்கோவில், ஜுன் 13

தமிழ்நாடு அரசாங்கம் அனுப்பி வைத்த நிவார ணப் பொதிகள் திருக் கோவில் பிரதேச செயலர் பிவில் நேற்று வழங்கப் பட்டது.

திருக்கோவில் பிரதேச செயலர் த. கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 2,150 பேருக்கு நிவாரண உதவிப் பொருட்களாக அரசி, பால் மா வழங்கி வைக்கப்பட் டன.

இந்த நிகழ்வில் திருக் கோவில் பிரதேச செய லாளர் த.கஜேந்திரன், உதவிச்செயலாளர் க.சதி சேகரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், கே.பரமானந்தம், பிரதேச செயலக நிர்வாக உதியோத்தர் எஸ்.மோகனராஜா, சமுர்த்தி சமுகச்சூழல் பாதுகாப்பு உத்தியோத்தர் எஸ்.பி.சீலன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகி யோர் கலந்து கொண்டனர். (ஐ)

# இளைஞர் திடீர் மரணம்!

காத்தான்குடி, ஜுன் 14

வீட்டில் பயிர்களுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண் டிருந்த இளை ஞர் திடீரென வீழ்ந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு - காத்தான் குடி - நாவற்குடாவில் இடம்பெற்றுள்ளது.

மரணமான இளை ஞர், கூலி வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பிய பின்னர் வீட் டுத் தோட்டத்தி லுள்ள பயிர்களுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டு இருந் துள்ளார்.

இந்தச் சமயத்தில், தாயாரை பொருட்கள் வாங்குவதற்காக கடைக்கு அனுப்பியுள் ளார். அவர் வீடு திரும் பியபோது தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த நிலையிலேயே அவர் வீழ்ந்து இறந்து கிடந் தார் என்று கூறப்படுகின் றது.

இவ்வாறு மரண மானவர் ஆனந்தன் ஜெயராஜ் (வயது -31) என்பவராவார்.

காத்தான்குடி பொலி ஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை களை ஆரம்பித்துள் ளனர். (ஐ)

# செட்டிப்பாளையம் கண்ணகி ஆலய கதவு திறத்தல் சடங்கு ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஜுன் 13

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு - செட்டி பாளையம் கண்ணகி அம்மன் ஆலயத்தின் கதவு திறத்தல் சடங்கு கடந்த வெள்ளிக் கிழமை மாலை கிராண்குள மக்களினால் வெகுசிறப்பான முறையில் இடம் பெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் கல்யாண சடங்கு தேற்றாத்தீவு கிராம மக்களின் ஏற்பாட்டிலும், இரவு பூரண கும்பம் சடங்குக்கு நெல் கொண்டுவருதல் நிகழ்வு, தேற்றாத்தீவு குடியிருப்பு மக்களின் ஏற்பாட்டிலும் இடம்பெற்றன.

இன்று திங்கட்கிழமை திருக்குளித்தில் சடங்கு களு தாவளை கிராம மக்களின் ஏற் பாட்டில் இடம்பெறவுள்ளது.

இச்சடங்குகள் ஆலயத்தின் பிரதம கட்டாடி சிவஸ்ரீ க .கு.தேவராசா குருக்களின் தலைமையில் இடம் பெறவுள் ளது.

மட்டக்களப்பு செட்டி பாளையம் கண்ணகி அம்மன் ஆலயம் கஜபாகு மன்னன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பழம்பெரும் ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பட்டிருப்பு பாலம் அருகே இளைஞன் சடலமாக மீட்பு

களுவாஞ்சிக்குடி, ஜுன் 13

பட்டிருப்பு பாலத்துக்கு அரு கில் உள்ள நீரேந்து பிரதேசத்தில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டதாக களுவாஞ்சிக் குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடியை சேர்ந்த குறித்த இளைஞர் மாட்டுக்கு புல் வெட்டுவதற்காக சென்றிருந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவர் களுவாஞ்சிகுடி 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பேரின் பராசா பிரதீபன் (வயது-29) என அடையாளம் காணப்பட்டுள் ளார்.

இவர் பயணித்த சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள் ளது. சம்பவம் தொடர்பில் களு வாஞ்சிகுடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிவானின் உத்தரவுக்கு அமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மருதடி கண்ணகி அம்மன் திருக்குளிர்த்தி சடங்கு விழா!

அக்கரைப்பற்று, ஜுன் 13

அக்கரைப்பற்று - மருதடி ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி பூரணை திருக்குளிர்த்தி சடங்கின் அம்மன் வெளிவீதி உலா பெருந்திரளான மக்களின் அரோகரா வேண்டுதலின் மத்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த திருக்குளிர்த்தி சடங்கு கடந்த 7ஆம் திகதி திருக்கதவு திறக்கும் வழிபாட்டுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து, 10ஆம் திகதி வரை நடை பெற்ற விசேட அபிஷேக மூன்று காலப் பூஜைகளுடன் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்று கும்ப உள்வீதி வெளி வீதி உலாவுடனும் நேற்றிரவு கல்யாணக்கால் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இன்று திருக்குளிர்த்தி மற்றும் பக்தர் களின் நேர்கடன் பொங்கலுட னும் 16 நடைபெறும் வைரவர் பூஜையுடனும் 21ஆம் திகதி இடம்பெறும் எட்டாம் சடங்குடனும் நிறைவுறும். (ஐ)



# பிளாஸ்ரிக்கை உண்ணும் புழுக்கள் கண்டுபிடிப்பு!



சிட்னி, ஜூன் 13

சுற்றுசூழலுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் பிளாஸ்ரிக்கை உணவாக உண்ணும் புழுக்களை அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மூன்று வகை புழுக்களிடம் மூன்று வார சோதனை மேற்கொண்டதில் சுப்பர் வார்ம் என்றழைக்கப்படும் புழுக்கள் பிளாஸ்ரிக் கழிவுகளை தின்று சமிபாடடையும் அதிசயத்தை கண்டுபிடித்தனர்.

இந்த புழுக்களின் குடலில் உள்ள ஒருவிதமான நொதிப் பொருள் பிளாஸ்ரிக்கையே சமிபாடடையச் செய்து விடுகிறது. இந்த நொதியில் உள்ள பற்றீரியாக்களை ஆய்வு செய்தால் பிளாஸ்ரிக் மறுசுழற்சியில் புரட்சியை ஏற்படுத்தலாம் என்று கூறப்படுகிறது.

மேலும்? சுற்றுசூழலை பாதிக்காத பிளாஸ்ரிக்கை கூட உருவாக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. (ஐ)

# அதிபயங்கர ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா திட்டம்!

## பிரிட்டன் - உக்ரைன் எச்சரிக்கை

லண்டன், ஜூன் 13

**உக்ரைனில் அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா தயாராகி வருகிறது என்று உக்ரைன் மற்றும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.**

உக்ரைன் போரில் ரஷ்யா எதிர்பார்த்தது போன்று வெற்றிகளை அடைய முடியவில்லை. கிழக்கு உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா தற்போது மிகத் தீவிரமாக முயன்று வருகிறது. இங்கு சில புதிய பகுதிகளைக் கைப்பற்றினாலும் கடும் எதிர்ப்புகளை சந்தித்து வருகிறது.

கடும் மோதல்கள் மாதக் கணக்கில் தொடர்வதால் ரஷ்யா, உக்ரைன் இரு தரப்பிலுமே எறிகுண்டுகள், பீரங்கி குண்டுகள், ஏவுகணைகள் போன்ற ஆயுதங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு கையிருப்பு குறைந்து வருகிறது.

தங்களிடமிருக்கும் ஆயுத கையிருப்பு தீர்ந்து வருவதாகவும் இனி மேற்கத்தேய நாடுகள் அனுப்பும் ஆயுதங்களை நம்பியே இருப்பதாகவும் உக்ரைன் கூறியுள்ளது.

ரஷ்யாவிடம் உள்ள நவீன ஆயுதங்களின் கையிருப்பு தீர்ந்து வருவதால் 1960களில் உருவாக்கப்பட்ட அதிபயங்கர ஏவுகணைகளை உக்ரைனில் பயன்படுத்த ஆயத்தமாகி வருகிறது என உக்ரைன் மற்றும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

தற்போது ரஷ்யா பயன்படுத்த திட்டமிட்டு வரும் கே. எச்-22 எனப்படும் ஏவுகணைகள், அணு ஆயுதத்தை சுமந்து மிகப்பெரிய விமானம் தாங்கி கப்பல்களை தாக்கி அழிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

அந்த ஏவுகணைகளில் வழக்கமான வெடிகுண்டுகளை பொருத்தி தரை இலக்குகளைத் தாக்கும்போது அவை மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும்.

5.5 தொன் எடை கொண்ட கே. எச்-22 ஏவுகணைகளில் பழைய தொழில்நுட்பங்கள் பயன்படுத்துவதால், தற்போது ரஷ்யா வீசும் நவீன ஏவுகணைகள் போல் அந்த ஏவுகணைகள் துல்லியமாக இலக்குகளைத் தாக்காது.

இதனால், இராணுவ இலக்குகளுக்கு பதிலாக குடியிருப்புப் பகுதிகளில் அந்த ஏவுகணைகள் விழுந்து ஏராளமான அப்பாவி பொதுமக்கள் பலியாகும் அபாயம் உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, கிழக்கு உக்ரைனின் லுஹான்ஸ்க் பகுதியில் ரஷ்ய படையினர் நெருப்புப் பிழம்புகளைக் கக்கும் ஆயுங்களைப் பயன்படுத்துதாக அந்தப் பிராந்திய ஆளுநர் செர்ஹி ஹாய்டாய் குற்றம் சாட்டியுள்ளார்.

போர்க்களங்களில் நெருப்புப் பிழம்பு ஆயுதங்களை பயன்படுத்துவது சட்ட விரோதமல்ல என்றாலும், லுஹான்ஸ்க் கிராமங்களில் ரஷ்யா வீசிய நெருப்பு ஏவுகணைகளால் பொதுமக்களின் ஏராளமான வீடுகள் தீக்கிரையாகின என்றும் ஹாய்டாய் தெரிவித்தார். (ஐ)

# மரண தண்டனையை நிறுத்தியது மலேசியா!

கோலாலம்பூர், ஜூன் 13

மரண தண்டனையை இரத்து செய்வதாக மலேசிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இனி மரண தண்டனைகளுக்கு பதிலாக மாற்று தண்டனைகள் வழங்கப்படும் என்று மலேசிய அரசின் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மலேசிய சட்டத் துறை அமைச்சர் வான் ஜுனைதி ஜாபர் கூறும்போது, "தூக்குத் தண்டனைக்கு எதிரான மசோதாவை அமைச்சரவை ஒப்புக்கொண்டது. மரண தண்டனைக்கு பதிலாக என்னென்ன தண்டனைகளை வழங்கலாம் என்பது குறித்து மேலும் ஆய்வு நடத்தப்படும்.

மரண தண்டனை விவகாரத்தில் எடுக்கப்பட்ட முடிவு, அனைத்துத் தரப்பினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும், உத்தரவாதம் அளிப்பதையும் உறுதி செய்வதில் மலேசிய அரசாங்கத்தின் முன்னுரிமையைக் காட்டுகிறது" என்று தெரிவித்தார்.

மலேசிய அரசின் இந்த முடிவின் மூலம், அந்நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு அந்த தண்டனை நிறைவேற்றப்படாது என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மலேசியாவில் போதைப்பொருள் கடத்தல், கொலை உள்ளிட்ட 11 குற்றங்களுக்கு மரண தண்டனைகள் வழக்கப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதிய அணு ஆயுதங்களை உருவாக்குவதில் முன்னேற்றம்!

## சீன வெளிவிவகார அமைச்சர்

சிங்கப்பூர், ஜூன் 13

புதிய அணு ஆயுதங்களை உருவாக்குவதில் சீனா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது என தெரிவித்துள்ள சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் எனினும் தற்பாதுகாப்பு நோக்கத்துடன் மாத்திரமே அவற்றை பயன்படுத்துவோம் என குறிப்பிட்டுள்ளார்.

சீனா அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்புஅமைச்சர் லொயிட் ஒஸ்டினை சிங்கப்பூரில் இடம்பெறும் சங்கரி லா பேச்சில் சந்தித்தபோதே வெய் பெங்கே இதனை தெரிவித்துள்ளார்.

கிழக்கு சீனாவில் அணு ஆயுதங்களை ஏவுவதற்கான 100 தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள சீனாவின் வெளிவிவகார அமைச்சர், நாட்டின் பாதுகாப்புக்காக அணுவாயுத தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்காக சீனா பொருத்தமான பாதைகளை பயன்படுத்தியுள்ளது - என்றார்.

2019 இல் சீனாவில் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பில் காட்சிப்படுத்தப்பட்ட அணு ஆயுதங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன அவற்றை பயன்பாட்டுக்கு ஏற்றவிதத்தில் நிலைகொள்ளச் செய்துள்ளோம் என சீன பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து தசாப்தங்களாக சீனா தனது அணுதொழில்நுட்ப திறனை அபிவிருத்தி செய்துள்ளது சிறப்பான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என அவர் மேலும் கூறினார். (ஐ)

# சவுதி அரேபிய பயணம் இதுவரை முடிவில்லை!

றியாத், ஜூன் 13

சவுதி அரேபியாவுக்கான பயணம் குறித்து இதுவரை முடிவு செய்யவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஜூன் பிற்பகுதியில் ஐரோப்பா மற்றும் இஸ்ரேலுக்கு பயணம் செய்ய பைடன் திட்டமிட்டுள்ளார். இந்தப் பயணத்தின்போது சவுதி அரேபியாவுக்கும் செல்ல அவர் திட்டமிட்டுள்ளாரென செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வாறான நிலையிலேயே சவுதி அரேபியாவுக் கான பயணம் குறித்து இதுவரை முடிவு செய்யவில்லை என பைடன் கூறியுள்ளார்.

சவுதி அரசாங்கத்தின் முக்கிய விமர்சகரான கஷோகி, ஒக்ரோபர் 2018 இல் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் சவுதி அரசை விமர்சித்தும், குறிப்பாக முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் ஜமால் கஷோகி கட்டுரைகள் எழுதி வந்தவராவார். இந்நிலையில் இந்தக் கொலையுடன் சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசருக்கு உள்ள தொடர்புகளே சவுதி பயணத்துக்கு ஜனாதிபதி தயங்குவதற்கான காரணம் என வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

# வடகொரியாவின் வெளிவிவகார அமைச்சராக பெண் நியமனம்!


பியோங்யொங், ஜூன் 13

வடகொரியா வரலாற்றில் முதல் பெண் வெளியுறவு அமைச்சராக சிரேஷ்ட இராஜதந்திரி சோ சோன்-ஹூய் நியமிக்கப்பட்டுள்ளாரென வடகொரிய அரச ஊடகமான கே. சி. என். ஏ. சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

தனக்கெதிரான பொருளாதார தடைகளை முறியடிக்கும் நோக்குடன் பேச்சுக்கான அமெரிக்க அழைப்புகளை புறக்கணித்து, அணு ஆயுத சோதனைகளை வட கொரிய முன்னெடுக்க ஆயத்தமாகி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் வெளியுறவு அமைச்சராக சிரேஷ்ட இராஜதந்திரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடகொரியா ஆளும் தொழிலாளர் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் அந்த நாட்டின் தலைவர் கிம் ஜோங் உன் தலைமையில் 3 நாட்கள் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் கூட்டத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம், வடகொரியாவின் புதிய வெளியுறவு மந்திரியாக சோ சோன்-ஹூய் என்கிற பெண் நியமிக்கப்பட்டார்.

தென்கொரியாவுடன் முன்பு பேச்சுக்களை நடத்தி வந்த கடுமையான முன்னாள் இராணுவ அதிகாரியான ரி சன் குவானுக்கு பதிலாக சோ சோன்-ஹூய் நியமிக்கப்பட்டுள்ளார்.



வடகொரியாவின் துணை வெளியுறவு அமைச்சராக சோ சோன்-ஹூய் முன்னர் பணியாற்றினார். சரளமாக ஆங்கிலம் பேசும் சிரேஷ்ட தொழில் முறை இராஜதந்திரியான சோ சோன்-ஹூய், அமெரிக்காவுடனான அணு சக்தி பேச்சுகளின் போது கிம்முக்கு நெருக்கமான உதவியாளராக பணியாற்றினார். அத்துடன், வட கொரியத் தலைவருடன் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நடத்திய பேச்சிம் அவர் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)







# இந்துக்களின் போர் சமநிலையில் முடிவு!

*யாழ்ப்பாணம், ஜூன் 13*

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி அணிகள் மோதிய பெருந்துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் இந்தப் போட்டி, கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸில் 230 ஓட்டங்களைக் குவித்தது. இதில், சாம்சன் 77, பிரியந்தன் 58 ஓட்டங் களை குவித்திருந்தனர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய 140 ஓட் டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில், ஆர். டிலுக்சன் 40 ஓட்டங்களை எடுத்தார்.

இரண்டாவது இனிங்ஸில் ஆடிய யாழ். இந்துக் கல்லூரி 29 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதில் சுபர்ணன் 31, கஜந்த் ஆட்டமிழக்காமல் 30 ஓட் டங்களை எடுத்தனர்.

201 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி 67 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்த நிலையில் இரண்டாம் நாளான சனிக்கிழமை ஆட்ட நேரம் முடிவுக்கு வந்தது.

கவிஸ்கரன் அந்த அணிக்காக 27 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றுக் கொடுத்தார்.

யாழ். இந்துவின் பந்துவீச்சில் சர்ஜன் 5 விக்கெட் களை வீழ்த்தினார்.

இதனால், இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது. இதுவரையான 11 போட்டிகளில் இது 7ஆவது சமநிலை போட்டியாகும். முன்னதாக 4 போட்டிகளில் கொழும்பு இந்துக் கல்லூரியும் ஒரு போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.







# வடக்கு நீலங்களின் சமர் துடுப்பாட்டமும் சமநிலை!

*கிளிநொச்சி, ஜூன் 13*

வடக்கு நீலங்களின் சமர் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்ட போட்டி சமநிலையில் முடிவடைந்தது. 11ஆவது தடவையாக வெள்ளிக் கிழமை ஆரம்ப மான இந்தப் போட்டி இரு நாட்கள் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 50.2 ஓவர்களில் 181 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில், தஜீபன் 41 (48 பந்துகளில்) பாவலன் 27 (125 பந்துகளில்) ஓட்டங் களைப் பெற்றனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பந்து வீச்சில் தமிழ்ப்பிரியன் 4 விக்கெட்களையும் ஹரிசாந் 3 விக் கெட்களையும் பெற்றனர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி முதல் நாள் ஆட்டம் முடியும் வரை, 32 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 94 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இரண்டாம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந் தும் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 52.5 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இந்துக் கல்லூரி அணி சார்பில் பகலவன் 38 ஓட்டங்களையும் கிருசாந்தன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் பந்து வீச்சில் அபிராஜ் மற்றும் பிரதாப் ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில், ஆடிய கிளிநொச்சி மத் திய மகா வித்தியாலயம் 26.5 ஓவர்கள் நிறைவில் 8 விக் கெட்களை இழந்து 158 ஓட்டங்களை குவித்திருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதனால், 200 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 36 ஓவர்கள் நிறைவில் 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ஆட்ட நேரம் முடிவடைந்தது.

இதனால், இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)

# சானக அதிரடி ஆட்டம் இலங்கை அபார வெற்றி!

*கண்டி, ஜூன் 13*

தசூன் சானகவின் அதிரடி ஆட்டத்தால் ஆஸிக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியை வெற்றி கொண்டது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள ஆஸி. அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபது - 20 போட்டி நேற்று முன்தினம் பல்லேகலவில் நடந்தது.

முன்னதாகவே இரு போட்டிகளில் வென்று தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியிருந்தது. இந்த நிலையில், ஆரம்பமான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய நிர்ணயித்த 177 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி.

16ஆவது ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இலங்கை அணி தடுமாறியது. கடைசி 26 பந்துகளில் வெற்றிக்கு மேலும் 69 ஓட்டங்கள் தேவைப்பட்டதால் இலங்கை தோல்வி அடையும் என கருதப்பட்டது.

ஆனால், அதிரடியாக ஆடிய அணித் தலைவர் தசூன் சானக 25 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட ஆட்டமிழக்காமல், 54 ஓட்டங்களைக் குவித்ததுடன் பிரிக்கப்படாத 7ஆவது விக்கெட்டில் சாமிக கருணாரட்னவுடன் (14 ஆ. இ.) 25 பந்துகளில் 69 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

முன்னதாக இலங்கை அணிக்காக தனுஷ்க குணதிலக (15), பெத்தும் நிசங்க (27), சரித் அசலங்க (26), பானுக ராஜபக்ஷ (17) ஆகியோர் துடுப்பாட்டத்தில் சுமாரான பங்களிப்பை வழங்கினர்.

ஆஸியின் பந்துவீச்சில் மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஜோஷ் ஹஸில்வூட் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இந்தத் தொடரில் மூன்றாவது தடவையாக நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதல் தடவையாக முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

அரோன் பின்ஞ் (29), டேவிட் வோர்ணர் (39) ஆகிய இருவரும் முதல் விக்கெட்டில் 24 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

எனினும், மொத்த எண்ணிக்கை 85 ஓட்டங்களாக இருந்தபோது அடுத்தடுத்த 3 பந்துகளில் க்ளென் மக்ஸ்வெல் (16), டேவிட் வோர்ணர் (39), ஜோஷ் இங்லிஸ் (0) ஆகியோர் ஆட்டமிழந்தனர். இதனால் ஆஸி. அணி தடுமாறியது.

ஆனால், ஸ்ரீவ் ஸ்மித் (37 ஆ.இ.), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் (38) ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் 48 ஓட்டங்களை பகிர்ந்து அணிக்கு சற்று பலப்படுத்தினர்.

தொடர்ந்து ஸ்டீவன் ஸ்மித், மெத்யூ வேட் (13 ஆ.இ.) ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 6ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்து 43 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியா கணிசமான மொத்த எண்ணிக்கையைப் பெற உதவினர்.

இலங்கையின் பந்துவீச்சில் சேர்ந்து தீக்ஷன 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக தசூன் சானக தெரிவனார். (ஐ)



# நிலைமை சீராகும்வரை சம்பளமே வேண்டாம்!

## கென்ய தூதுவர் கணநாதன்

**கொழும்பு, ஜூன் 13**

**நாட்டின் நிலைமை சீராகும் வரை தனது சம்பளத்தை பெறப்போவதில்லையென தெரிவித்துள்ளார் கென்யாவுக்கான இலங்கைத் தூதுவர் வி.கணநாதன்.**

பண்டாரவளையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் வி. கணநாதன், கென்யாவுக்கான இலங்கை தூதராக செயல்பட்டு வருகிறார்.

இவர், வெளிவிவகார அமைச்சுக்கு தனது மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவை உடனடியாக நிறுத்தும்படி கேட்டுள்ளார்.

அவரின் சம்பளம் மாதம் 3,000 அமெரிக்க டொலர்களாகும்.

தற்போதைய நெருக்கடியில், தனது மாதாந்த சம்பளத்தை ஏற்க மறுக்கும் முத லாவது இராஜதந்திரி கண நாதன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக பெரேரா களமிறங்குவார்?

கொழும்பு, ஜூன் 13

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி பேட்பாளராக தம்மிக பெரேராவே களமிறங்குவார் என்று பொதுஜன பெரமுனவின் முன்னாள் மூத்த அமைச்சர் ஒருவர் சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

நீண்ட அரசியல் பயணத்தை மேற்கொள்ளும் நோக்கிலேயே தம்மிக பெரேரா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்க முன்வந்துள்ளார் என்று அந்த முன்னாள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவை புதிய வடிவில் மறுசீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் பொதுஜன பெரமுன பிற கட்சிகளுடனும் அமைப்புக்களுடனும் இணைந்து கூட்டு அமைத்து தேர்தலில் களமிறங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவை பலப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு பஸில் ராஜபக்ஷ தலைமை தாங்குவார் என்றும் அவரின் அறிவுறுத்தலின் பேரிலேயே மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களை தொடங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தாரென அந்த சிங்கள இணையத்தளம் தெரிவித்துள்ளது. (அ)

# 800,000 தொன் அரிசி தட்டுப்பாடு ஏற்படும்!

## ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது



கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதிக்குள் 8 இலட்சம் மெற்றிக் தொன் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தற்போதைய நிலையில் நாடு பெரும் பிரச்னைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆற்றிய உரை, இதேபோன்று நாட்டில் தற்போது இடம்பெறும் விடயங்களைப் பார்க்கும்போது, நாடு உணவுத்தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் என்பது தெளிவாகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம், யுனிசெவ் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு உதவுமாறு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன. கடந்த சில வருடங்களாகவே எமது உணவு உற்பத்தி மிகவும் கீழ் மட்டத்துக்கு சென்றுவிட்டது. நெல் உற்பத்தி மட்டும் நூற்றுக்கு 50 சதவீதமாக குறைவடைந்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு குறிப்பாக செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் 8 இலட்சம் தொன் அளவுக்கு அரிசி தட்டுப்பாடு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அரிசி மட்டுமல்ல மரக்கறிகள், பருப்பு அதேபோன்று எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படாத உணவுப் பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படும்.

நாட்டில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படுவதற்கு அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானமே காரணம் - என்றும் அவர் கூறினார். (கே)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



**போதும்...! ஏந்திய கைகள்**
**சற்றே உயரட்டும்**

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!

**வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்**
**நமது பசியை நாமே போக்க...**
**எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!**

பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

www.dantv.tv


# சமலும் ஒதுங்குகிறார்?

கொழும்பு, ஜூன் 13

ராஜபக்ஷ குடும்பத்தின் மிக மூத்த உறுப்பினரான சமல் ராஜபக்ஷவும் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகத் தயாராகி வருகிறார் என்று தென்னிலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த சில வாரங்களுக்குள் அவர் பதவி விலகுவார் என்பதோடு, அரசியலில் இருந்து நிரந்தரமாக அவர் ஓய்வு பெறவுள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் ஜனாதிபதியாகத் தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முடிவுடனேயே மகிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து நிரந்தரமாக ஓய்வு பெற்றிருக்கவேண்டும் என்றும், கதிரைகளுக்காகப் பேராசை கொண்டு வாழ்ந்தால், அந்த பேராசையே ஒரு தரித்திரமாகப் பின்தொடரும் என்றும் ஒரு சர்ச்சையான உரையை, மகிந்த அருகில் அமர்திருந்தபோதே, சமல் ராஜபக்ஷ அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றியிருந்தார்.

இந்நிலையில், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் நிதியமைச்சருமான பஸில் ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை தனது தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய நிலையில் சமலின் விலகல் தொடர்பான செய்திகளும் தற்போது வெளிவந்துள்ளன. (அ)

## எந்த...

வாறு கூறினார்.

மேலும், "எனது சுயவிருப்பத்தின் பிரகாரமே தேசியப் பட்டியல் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தேன். எவரினதும் அழுத்தங்களால் எனது எம்.பி. பதவியை நான் துறக்க வில்லை.

அரசியலில் எனது பயணம் தொடரும் என்று நான் ஏற்கனவே கூறிவிட்டேன். அந்தப் பயணம் எப்படி அமையும் என்று என்னால் வெளிப்படையாகக் கூற முடி யாது.

நான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் வேட்பாளராகக் களமிறங்கவுள் ளேன் என்றும் செய்திகள் வெளிவருகின் றன. இதையடுத்து சிலர் எனக்கு எதிரா கப் புதிய கட்சிகளை ஆரம்பிக்கும் நட வடிக்கையிலும் இறங்கியுள்ளனர்.

இதை நினைக்கும்போது சிரிப்புத் தான் வருகின்றது. எத்தனை புதிய கட்சி கள் உருவாகினாலும் அவை பொதுஜன பெரமுனவுக்கு ஒருபோதும் சவாலாக இருக்கமாட்டா.

எதிர்வரும் காலங்களில் என்ன தேர் தல் நடந்தாலும் அதில் சிறீ லங்கா பொது ஜன முன்னணி வெற்றி வாகை சூடும். இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரத்தின்படி எந்நேரமும் எதுவும் நடக்கலாம். எவருக்கும் பதவிகள் நிரந் தரம் இல்லை. இன்று உயர் பதவியில் இருப்பவர்கள் நாளை சாதாரண பதவி யில் இருக்கலாம். இன்று சாதாரண பதவியில் இருப்பவர்கள் நாளை உயர் பதவியில் இருக்கலாம். இலங்கை அரசி யலில் எதிர்வரும் காலங்கள் தீர்க்கமான தாக இருக்கும்" என்றார். (ஐ)

## வெள்ளிக்கிழமை...

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்த் தன இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட எரிசக்தி நெருக் கடிக்கு தீர்வாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## வாராந்த...

- இவ்வாறு எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு பதிவிட்டுள் ளார்.

மேலும், தடையில்லா மின்சாரம் மற்றும் நிலையான எரிபொருள் விநி யோகம் கிடைக்கும் வரை,

எரிபொருள் விநியோக மேலாண்மை சாத்தியமற்றது. நிதிக் கட்டுப்பாடுகளின் மத்தியில் பெற்றோலிய கூட்டுத்தாபனம், ஒரு வாரத்துக்கு நிர்வகிக்க எரிபொருளை இறக்குமதி செய்கிறது. ஆனால், சில நுகர்வோர் தங்கள் இயந்திரங்கள், ஜென ரேட்டர்களுக்காக ஒரு மாதம் அல்லது அதற்கும் மேலாக தேவையான எரி பொருளை சேகரிக்கின்றனர்.

எரிவாயு பற்றாக்குறையால் மின்சாரம் மற்றும் மண்ணெண்ணெய் தேவை அதி கரித்துள்ளது. 4 மாதங்களுக்கு முன்பு 200 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த மாதாந்த எரிபொருள் கட்டணம் தற்போது 550 மில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது.

நிதி நிலைமையை வலுப்படுத்தும் வரை நுகர்வோர்களை நிரப்பு நிலையங் களில் பதிவு செய்து, அவர்களுக்கு உத்தர வாதமான வாராந்த ஒதுக்கீட்டை வழங் குவதைத் தவிர வேறு வழியில்லை. ஜூலை முதல் வாரத்தில் இந்த அமைப்பு நடைமுறைக்கு வரும் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

## குருந்தூர்மலை...

துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதேநேரம், ஆர்ப்பாட்டத்தில் பங் கேற்க வந்தவர்கள் சிலரை பொலிஸார் மறித்த நிலையில் மீறி செல்ல முயன்ற மூவரை தாக்கியதுடன் அவர்களை வாக னத்தில் ஏற்றி தடுத்து வைத்திருந்ததுடன், சிறிது நேரத்தின் பின்னர் விடுவித்தனர்.

எனினும், தமிழ் மக்களின் எதிர்ப்புக் காரணமாக வழிபாட்டு முயற்சிகளும் சிலை நிறுவும் பணியும் கைவிடப்படுவ தாகவும், பிறிதொருநாளில் தமிழர் தரப்பு களுடன் தொடர்புடைய திணைக்களங் கள் அமைச்சர் உள்ளிட்டவர்கள் கலந் துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை களை முன்னெடுக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டது.

இதேசமயம், போராட்டம் நடை பெற்ற இடத்துக்கு வந்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் அநுரமான துங்க போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்தினார். அத்துடன், அந்தப் பகுதி யையும் பார்வையிட்டார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"குருந்தூர்மலையில் தொல்லியல் ஆய்வின் மூலம் கிடைத்த எச்சங்களை பேணிப் பாதுகாப்பதற்காக புனர்நிர் மாணம் செய்யும் வேலைளை முன்னெ டுக்கப்படுகின்றன. அங்கு புதிதாக கட்ட டங்கள் எதனையும் கட்டவில்லை. அத் துடன், எமது திணைக்களத்துக்கும், பௌத்த துறவிகள், இராணுவத்துக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை - என் றார்.

எனினும், அவரின் கருத்துக்கு மாறாக குருந்தூர் மலையில் விகாரை அமைக்கப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், குருந்தூர் மலையை சூழ தமிழர்களின் பாரம்பரிய நிலங்களுக்கு உரிமை கோருதல், அவர்களை அங்கு நுழைய தடை விதித்தல் தொடர்பில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பா ளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், பௌத்த பிக்குகள் தடுப்பதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை - என்றார். (ஐ)

## தமிழர்...

வாதத்தின் ஒரு விளைவாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அம்பாறை பாண்டிருப்பு விளையாட்டு போட்டி ஒன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எனக்கு 20 வருட அரசியல் அனுபவம் உண்டு. இந்த நாட்டில் பொரு ளாதார வீழ்ச்சியை அரசாங்கம் அனுப வித்து கொண்டிருக்கின்றது. இந்த அரச கட்டமைப்புக்குள் உள்ள மக்கள் எவ் வாறு சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்பதை நாம் அவதானிக்கலாம். கடந்த 30 வருடங்களாக இலங்கை அரசாங்கம் தமிழர்களின் பொருளாதாரத்தை திட்ட மிட்டு போரால் அழித்தது. பின்னர் போர் நிறைவுற்று 13 வருடங்களின் பின் னரும் தமிழருக்கு இந்த நிலை தொடர்ந் தது.

74 வருடங்களாக பல்வேறு கட்ட மைப்புடன் தமிழர்களை அழித்த அர சாங்கம் வங்குரோத்து நிலைமைக்கு சென்றிருக்கின்றது. இந்த நாட்டில் வருடாந்த வரவு - செலவு திட்டத்தில் பாதுகாப்புக்கு 19 வீதம் ஒதுக்கப்படு கின்றது. அதில் ஒரு வருடத்துக்கு இரா ணுவத்தினரின் தேவைக்கு வரவு - செலவு திட்டத்தில் 13 வீதம் ஒதுக்கப்படுகின்றது.

கல்வி மற்றும் சுகாதார பிரிவிற்கு பாதுகாப்பு செலவிற்கு என ஒதுக்கப்படு கின்ற வீதத்தில் அரைவாசியே ஒதுக்கப் படுகின்றது. இந்த நாட்டின் சொத்து மனிதர்கள் எனின் அவர்களுக்கு கல்வி யும் சுகாதாரமும் அவசியம்.

இலங்கை அரசாங்கம் தமிழர்களை அழிப்பதற்காகவே பாதுகாப்புக்கு இவ் வாறு முக்கியத்துவம் கொடுக்கின்றது. தமிழர்கள் போன்றே முஸ்லிம்கள் முன் னேறக்கூடாது என இராணுவத்தை வட, கிழக்கில் குவித்துள்ளனர் - என்றார். (ஐ)

# அக்மீம கூட்டுறவு சங்க தேர்தல் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி!

கொழும்பு, ஜுன் 13

அக்மீம பலநோக்கு கூட்டுறவு சங்கத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.

இதில் சிறப்பு என்னவென்றால் மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டி யிட்டிருந்தன.

ஆனால், வரலாற்றில் முதற் தடவை யாக அக்மீமன கூட்டுறவுச் சங்கத்தின் 100 இடங்களில் 67 இடங்களை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியது.

விஜேபால ஹெட்டியாராச்சி அக்மீ மன தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளராக உள்ளார். (சி)

# இலங்கையின் நெருக்கடி குறித்து இந்திய பாராளுமன்றில் விளக்கம்!

புதுடில்லி, ஜுன் 13

இலங்கையின் தற்போதைய நிலைமை - நெருக்கடிகள் குறித்து இந்திய வெளிவிவ கார அமைச்சர் ஜெய்சங்கர் இந்திய பாராளுமன்ற குழுவுக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி நடக்கும் இந்த விளக்கமளிப்பு கூட்டத்தில் இந்திய வெளி விவகார அமைச்சருடன் முக்கிய அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த கூட்டத்தில், இலங்கையின் பொருளாதார நெருக்கடி, இந்தியாவின் அயலுற வுக் கொள்கை, புதுடில்லி கொழும்புக்கு எவ்வாறான உதவிகளை வழங்கியுள்ளது என் பது போன்ற விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு விளக்கமளிப்பார்.

வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்ற கலந்தாய்வு குழுவில் இடம்பெற்றுள்ள திராவிட முன்னேற்ற கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்டவர்கள் இலங்கை தொடர்பில் கேள்விகளை எழுப்பவுள்ளனர். (ஐ)

# மட்டு. - திருமலை வீதியில் விபத்தில் மூதாட்டி மரணம்!

திருகோணமலை, ஜுன் 13

நடந்து சென்றவரை மோட்டார் சைக் கிள் மோதிய விபத்தில் படுகாயமடைந்த மூதாட்டி நேற்று உயிரிழந்தார்.

சனிக்கிழமை இரவு 7 மணியளவில் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி 59ஆம் கட்டையில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், படுகாயமடைந்து உயிரிழந்த வர் தோப்பூர், 59ஆம் கட்டை ஜின்னா நகரைச் சேர்ந்த நான்கு பிள்ளை களின் தாயாரான ஆர். கொச்சிம்மா (வயது 63) என்று அறிய வந்துள்ளது.

மரணமான பெண், வீட்டிலிருந்து நோயாளி ஒருவரைப் பார்வையிடுவதற் காக நடந்து சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதி விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இதில், படுகாயமடைந்த பெண் திரு கோணமலை பொது வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார். எனினும், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை மரணமானார்.

இதேவேளை, விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற மோட்டார் சைக் கிளுக்கு உரியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட் டது. (ஐ)

# யாழ். மாவட்டத்துக்கு புதிய கட்டளை தளபதி!



யாழ்ப்பாணம், ஜுன் 13

யாழ்ப்பாணம் மாவட்ட படைகளின் 28ஆவது கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர நேற்று ஞாயிற்றுக்கிழமை பதவி ஏற்றுக்கொண் டார்.

அனைத்து மத வழிபாடுகளுடனும் இராணுவத்தினரின் அணிவகுப்புடன் புதிய கட்டளைத் தளபதி பணியை ஆரம் பித்தார்.

இந்த நிகழ்வில் படைத் தளபதிகள், முன் பராமரிப்பு பிரதேசம் (வடக்கின்) தளபதி, படைப் பிரிவுத் தளபதிகள், இரா ணுவ உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## பாடசாலை...

களையும், மாணவர்களையும் இரண்டு பிரிவுகளாக பிரித்து, வாரத்துக்கு தலா மூன்று தினங்கள் பாடசாலைக்கு அழைப்பதற்கு, அதிபர் - ஆசிரியர் தொழில்சங்க ஒன்றியம் கல்வி அமைச்சி டம் யோசனை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜுலை 15 முதல் யூரியா விநியோகம்!

கொழும்பு, ஜுன் 13

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட யூரியா உரக் கப்பல் ஜுலை 10 அல்லது 11 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது என்று விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

65,000 மெற்றிக் தொன் யூரியாவை ஏற்றிக்கொண்டு ஜுன் 28 ஆம் திகதி ஓமானில் இருந்து கப்பல் புறப்பட உள் ளது, அதற்கமைய, ஜுலை 15ஆம் திகதி முதல் விவசாயிகளுக்கு உரம் விநியோகிக் கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## விவசாய...

பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித் தார்.

விவசாய அமைச்சில் இடம்பெற்ற பாராளுமன்ற ஆலோசனைக் குழு கூட் டத்தில் இது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. கமநல சேவை திணைக்களத்தால் விவசாய காணிகள் இனங்காணப்பட்டு, பயிரிட விரும்புப வர்களுக்கு அதனை கையளிக்க நடவ டிக்கை எடுக்கவுள்ளது.

நாடளாவிய ரீதியில், சுமார் ஒரு இலட்சம் ஹெக்ரெயர் தரிசு நிலங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சுமார் 50 ஆயிரம் ஹெக்ரெயர் வரையான காணி கள் விவசாய நடவடிக்கைகளை மேற் கொள்ள பொருத்தமானவை என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மக்களிடம் வெளிப்படை பேச்சு ரணிலுக்கு அமெரிக்கா பாராட்டு



கொழும்பு, ஜூன் 13

நாடு பெரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்திருக்கும் நிலையில், இப்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் வசம் பெரும் பொறுப்பு காணப் படுகின்றது.

குறிப்பாக, அவர் தற்போதைய நெருக்கடி குறித்து நாட்டுமக்களிடம் வெளிப் படையாகப் பேசுகின்றார். இவ்வாறு பிரச்னைகள் மற்றும் அதற்குரிய தீர்வுத்திட் டங்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களிலும் வெளிப் படைத்தன்மையுடன் பேசுவது வரவேற்கத்தக்கது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி, புதிய பிரதமர் நியமனம் குறித்த நிலைப்பாடு, பொதுமக்களின் எதிர் பார்ப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கை தற்போது கடினமானதொரு சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றது. அண்மையில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் ஒட்டுமொத்த உலகத்தையும் அதிர்ச்சியடைச் செய்தது.

பொதுமக்களுக்கு எதிராகவோ, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு எதிராகவோ அல்லது பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தும் வகையிலேயே கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாதவையாகும்.

இப்போது நாட்டுமக்கள் கட்டமைப்பு ரீதியான மாற்றமொன்றைக் கோருகின்றார்கள். இதுகுறித்து அண்மையகாலத்தில் ஆளுந்தரப்பு, எதிர்த்தரப்பு பிரதிநிதிகளுடன் முன்னெடுத்த பேச்சுகளின்போது அவர்களனைவரும் வெவ்வேறு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்கள்.

இருப்பினும் நிலைபேறானதும், ஸ்திரமானதுமான அரசியல் கட்டமைப்பையும் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளையுமே மக்கள் எதிர் பார்க்கின்றார்கள் என்பதை நாம் கூறவிரும்புகின்றோம்.

இலங்கையுடன் அமெரிக்கா நீண்டகாலமாக நல்லுறவைப் பேணிவருவதுடன், மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு, கல்விசார் தொடர்பு, வணிகம் சார் தொடர்பு உள்ளடங்கலாக இருநாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைசார்ந்த தொடர்புகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன.

அதுவே, எமது இலக்காக இருப்பதுடன், இலங்கையின் வெற்றியை எமது வெற்றியாகப் பார்க்கின்றோம். ஆகவே இலங்கை நிறைபேறானதும், வெற்றிகரமானதுமான ஜனநாயக நாடாகத் திகழவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் வசம் பெரும் பொறுப்பு காணப்படுகின்றது. அந்தவகையில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதிக்கட்டமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயல்படுவதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள், பொருளாதார மற்றும் சட்ட ஆலோசகர்களை நியமிப்பதற்கான தீர்மானம் உள்ளிட்ட தொடக்க நடவடிக்கைகள் திருப்தியளிப்பவையாக உள்ளன.

அதுமாத்திரமன்றி பிரதமர் தற்போதைய நெருக்கடி குறித்து நாட்டுமக்களிடம் வெளிப்படையாகப் பேசுகின்றார். இவ்வாறு பிரச்னைகள் மற்றும் அதற்குரிய தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களிலும் வெளிப்படைத்தன்மையுடன் பேசுவது வரவேற்கத்தக்கதாகும் - என்றார். (ஐ)

# உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வாக சமூக பண்ணைகள் உருவாக்கம்!

## ஜே. வி. பியினர் திட்டம்

கொழும்பு, ஜூன் 13

பல மாற்றங்களை கடந்த வாரம் முன்னெடுத்த ஜே.வி.பி. இதன்படி தற்போது நிலவும் உணவுப் பற்றாக் குறைக்கு தீர்வாக கிராம மட்டத்தில் சமூக பண்ணைகளை உருவாக்கத் தீர்மானித்துள்ளதாக கூறப் பட்டது.

மேலும், கர்ப்பவதித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளுக்கு அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றையும் ஜே.வி.பி வகுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# பஸிலின் கோரிக்கையை நிராகரித்து தம்மிகவை எம்.பியாக்கிய ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 13

அண்மையில் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகிய பஸில் தனது வெற்றிடத்துக்கு இருவரின் பெயர்களை முன்மொழிந்த போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களை நிராகரித்து தம்மிக்கவை நியமித்தார் என்று தெரிய வருகின்றது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான சிங்கள வார ஏடு தனது பத்தியில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பதவி விலகுவதற்கு முன்னர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் தனித்தனியாக சந்தித்தார். பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக அவர், தனது சகோதரர்களிடம் தெரிவித்தார்.

பொருத்தமான வேட்பாளரை நியமிக்குமாறு தெரிவித்த பஸில் ராஜபக்ஷ, தாம் தனிப்பட்ட முறையில் யாரையும் நியமனம் செய்யாவிட்டாலும் கட்சியில் இருந்து ரேணுகா பெரேரா அல்லது சிறிபால அமரசிங்க ஆகிய இருவரையே முன்னிறுத்துவதாக ஜனாதிபதிக்கு அவர் கூறினார்.

எவ்வாறாயினும், அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ, தொழிலதிபர் தம்மிக பெரேராவை வெற்றிடமாக உள்ள தேசிய பட்டியல் ஆசனத்திற்கு கொண்டு வர விரும்பினார். தம்மிகவால் முன்வைக்கப்பட்ட டொலர் தேடுதல் திட்டங்களை ஜனாதிபதி நடைமுறைப் படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப் பட்டது.

இதன்படி, தம்மிக பெரேராவை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருமாறு அரச தலைவர் பஸில் ராஜபக்ஷவிடம் முன்மொழிந்தார். இறுதியாக ஜனாதிபதியின் சிபாரிசுக்கு பஸில் உட்பட அனைவரும் இணங்க நேரிட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், கட்சி இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, தம்மிக பெரேரா கட்சி உறுப்புரிமையைப் பெற வேண்டியிருந்தது. இதன்படி, பொதுஜன பெரமுனவில் கட்சி உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளுமாறு தம்மிவுக்கு ஜனாதிபதி கூறினார்.

இதன்படி கட்சி அலுவலகம் சென்று கட்சி உறுப்பினர் அட்டையை பெற்றுக்கொண்டார். வியாழக் கிழமை தம்மிக பெரேரா பாராளுமன்றம் வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# மரத்திலிருந்து தவறி வீழ்ந்து மாணவன் ஒருவர் உயிரிழப்பு

நுரெலியா, ஜூன் 13

மஸ்கெலியா - பிரவுன்லோ வனப்பகுதிக்கு தனது சகோதரனுடன் நேற்று விறகு சேகரிக்கச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன், மரத்திலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.சிறுவன் மரத்திலிருந்து தவறி விழுந்த நிலையில், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதில்,மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டத்தைச் சேர்ந்த 14 வயதான எஸ்.ஜே.ரஜிந்த துல்சான் குணசேகர என்ற சிறுவனே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மக்கள் படும் துயரங்கள் கண்டு மிகுந்த வேதனையடைகிறேன்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 13

தேசம் படும் துயரங்களை கண்டு ஒரு குடிமகனாகவும் பிரதமர் என்ற வகையிலும் மிகுந்த வேதனையடைகின்றேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேலும் கூறியதாவது:

கடந்த காலத்தில் அரசாங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தியபோது மக்களுக்கு மூன்று வேளை உணவு வழங்கினோம். அவர்களின் வருமானத்தை அதிகரித்திருந்தோம். தற்போதைய நிலையிலிருந்து மீட்டெடுக்க முயற்சித்து வருகின்றோம்.

தற்போது நிலவுவது போன்று முன்னெப்போதும் இலங்கையில் காணப்படவில்லை. இவ்வாறு நடக்கும் என்று எல்லாம் நாம் எதிர்பார்த்திருக்கவும் இல்லை.

கடினமான காலங்கள் முன்பிருந்த போதிலும் எரிபொருள் மற்றும் உணவு இன்றி எமது நாட்டவர்கள் தவிர்த்து வருவதைப் பார்த்ததில்லை - என்றார். (சி)

## இலங்கைக்கு பயணம்

# பிரிட்டன் அரசு விதித்த கட்டுப்பாடுகள் தளர்வு

லண்டன், ஜூன் 13

அத்தியாவசிய தேவைகளுக்காக இலங்கைக்குப் பயணிப்பது குறித்து பிரிட்டன் அரசாங்கம் தமது பயண வழிகாட்டலில் வெளியிட்டிருந்த எதிர்ப்பை தற்போது தளர்த்தியுள்ளது.

இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள்மீது கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து நாடளாவிய ரீதியில் பதிவான வன்முறைச் சம்பவங்களால் இலங்கைக்கு பயணங்களை மேற்கொள்வது குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல உலகநாடுகள் பயண வழிகாட்டல்கள் ஊடாகத் தமது பிரஜைகளிடம் வலியுறுத்தியிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது பிரிட்டன் இலங்கைக்கான அதன் பயண வழிகாட்டலைத் தளர்த்தியிருக்கின்றது.

“இறக்குமதிக்கு அவசியமான வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறை காரணமாக மருந்து, எரிவாயு, எரிபொருள், உணவுப்பதார்த்தங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, பல்பொருள் அங்காடிகள், எரிபொருள் நிரப்புநிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் போன்றவற்றில் நீண்ட மக்கள் வரிசைகள் காணப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. தனியார் கார் மற்றும் பொதுப் போக்குவரத்து சேவையைப் பெற்றுக்கொள்வதில் தாமதமேற்படக்கூடும். அத்தோடு நாளாந்தம் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுவருகின்றது“ என்று தற்போது பிரிட்டன் புதுப்பித்து வெளியிட்டிருக்கும் பயண வழிகாட்டலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுக்கூடும் என்பதால் அத்தகைய போராட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களில் இருந்து விலகியிருக்குமாறும் பிரிட்டன் அரசாங்கம் அதன் பிரஜைகளிடம் கேட்டுள்ளது. இருப்பினும், அத்தியாவசிய தேவைகளுக்காக இலங்கைக்குப் பயணிப்பது குறித்து ஏற்கனவே வெளியிட்டிருந்த எதிர்ப்பை தற்போது அந்நாட்டு அரசாங்கம் அதன் பயண வழிகாட்டலில் தளர்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*



*6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய ராசி பலன்*
*7.05 மணி : உளவியல் கருத்து-*
*உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்*
*7.15 மணி : கதைவழி அறமொழி*
*வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு*
*7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்*
*டாக்டர் விவியன் சத்தியசீலன்*



*07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)*
*10.30 மணி : தொடர் நாடகம்*
*11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு*
*11.30 மணி : மனிதனின் மறுபக்கம்*

பகல்

*12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை*
*நகைச்சுவை நிகழ்ச்சி*
*1.00 மணி : அறிந்தும் அறியாமலும்*
*(மறு ஒளிபரப்பு)*
*1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கெத்து,தேர்*
*4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை*
*மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி*
*5.30 மணி : குறுந்திரை நேரம்*
*6.00 மணி : ரெயிலர் ரைம்*
*06.30 மணி : நலந்தானா*

இரவு

*07.00 மணி : சொற்சமர் -பாடசாலை*
*மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி*




*8.00 மணி : இரவுச் செய்திகள்*
*9.00 மணி : சாட்சியம்*
*09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்*
*10.00 மணி : நேருக்கு நேர்*

## DAN COMEDY HD

**காலை**

*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*

**பகல்**

*1.00 மணி : நகைச்சுவை மன்னன்*
*கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*

**இரவு**

*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

## DAN MUSIC HD

**காலை**

*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*

**பகல்**

*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஓய்வெடு நிலவே*

**இரவு**

*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

## கல்வி tv CHANNEL-1

**காலை**

*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)*
*நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)*
*வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம்*
*(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*

**பகல்**

*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்*
*மாதிரி வினாத்தாள்*

**இரவு**

*7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்*
*மாதிரி வினாத்தாள்*

## ரிவி

**காலை**

*5.00மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*7.00 மணி : இன்றைய சிந்தனை*
*7.05 மணி : இன்றைய நாள்*
*7.20 மணி : ஈழத்து சித்தர்கள்*
*7.30 மணி : மங்கள இசை*
*8.00 மணி : அருளுரை*
*8.30 மணி : திருவாசகம்*
*9.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பஜனை*
*10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா*
*11.00 மணி : பக்திமலர்*

**பகல்**

*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*

**இரவு**

*7.00 மணி : செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*
*8.00 மணி : திருவிழா-01*

## CHANNEL HOLY MARY

**காலை**

*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்*
*8.00 மணி : ஜெபமாலை*
*9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்*
*(மறுஒலிபரப்பு)*
*10.00 மணி: அன்னை மரியா*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை*
*(சனி மறு ஒளிபரப்பு)*

**பகல்**

*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*02.00 மணி : நற்கருணை ஆராதனை*
*(திருகோணமலை)*
*03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்*
*(மறு ஒளிபரப்பு)*
*04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)*
*07.00 மணி : ஞானவழி*
*07.30 மணி : அன்பியம்*

## Pirai Television

**காலை**

*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*

**பகல்**

*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஸ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*

**இரவு**

*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*